Registered as a NewsPaper

18 APR 2005
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-05 18-04-2005 திங்கட்கிழமை ஓசை 59



கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11478)

# ஆளும் கட்சிக்குள் சனாதிபதிக்கு எதிரானோரை

# அணி திரட்ட ஜே. வி. பி. திரைமறைவு முயற்சி!

## அநுராவையும் இணைக்கத் திட்டம்

(கொழும்பு)

**சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிரான அணியினரை ஒன்று திரட்டும் நடவடிக்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. தீவிரமாக ஈடுபட்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த அணியில் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவையும் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.**

சனாதிபதியுடன் முரண்பட்டுள்ள அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில்சனாதிபதிக்குஎதிரானவர்களின் அணியினை தோற்றுவித்து சனாதிபதியை பதவி கவிழ்க்கும் முயற்சிகள் திரை மறைவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்தக் கூட்டினை உருவாக்குவதற்கு ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச கடும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவின் பொருளாதாரம் வீழ்ச்சிப் போக்கில் செல்கிறது

### மத்திய வங்கி அறிக்கை தெரிவிப்பு

ஐக்கியக் தேசிய கட்சி ஆட்சியிலிருந்த 2003 ஆம் ஆண்டு டிசம்பரில் 6.6 ஆக இருந்த சிறிலங்கா பொருளாதார வளர்ச்சியானது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி ஆட்சிக்கு வந்த 2004 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதமளவில் 4.4 வீதத்தினால் குறைவடைந் துள்ளதாக சிறிலங்கா மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது. அதன்படி சிறிலங்காவின் பொருளாதாரம் மீண்டும் பின்நோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளது. விவசாயம், மீன்பிடி மற்றும் சிறுகைத் தொழில் ஆகிய துறைகளே வீழ்ச்சிய டைந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.யினர் பச்சோந்திகள்

(கொழும்பு)

ஜே.வி.பியினர் தமது நிலைப்பாட்டிலிருந்து தவறியிருப்பதாகவும் அவர்கள் பச்சோந்திகள் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபை ஆகியன மாற்றியமைக்கப் படமாட்டாதென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கனடா நாட்டிற்கான உயர்ஸ்தானிகராக சந்திரானந்த டி சில்வாவை ஏற்க முடியாது

### கனடா அரசாங்கம் சிறிலங்காவுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்தால் புதிய தூதுவராக கனடா நாட்டிற்கு தெரிவு செய்யப்பட்ட முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சந்திரானந்த டி சில்வாவின் நியமனத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென கனடா அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்திடீர் முடிவை இவ் வாரப்பகுதியில் கனடா அரசாங்கம் சிறிலங்கா அரசிற்குத் தெரிவித்ததாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. சிறிலங்கா பாதுகாப்பமைச்சின் செயலாளராக சந்திரானந்த டி சில்வா பணியாற்றிய காரணத்தால் அக்கால கட்டத்தில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர் என்ற குற்றச்சாட்டுகள் நிரு



(12ஆம் பக்கம் பார்க்க)

## வித்துடல் விதைப்பு

சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் சாவடைந்த வீரவேங்கை இயற்கதிர் (விஜயகுமார் விஜிந்தன்/விஜி, யோகபுரம், உரும்பிராய் யாழ்ப்பாணம்) என்ற மாவீரரின் வித்துடல் நேற்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

முன்னதாக வித்துடல் நேற்று இம்மாவீரரின் சொந்த இடமான யோகபுரம் உரும்பிராயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு அங்கிருந்து மாலை 6.30 மணியளவில் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துவரப்பட்டு உரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேசத்துரோகக் குழுக்களுக்கு சிறில.படையினர் அடைக்கலம்

### மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர்

மட்டக்களப்பு-அம்பாறையில் முன்னர் இயங்கிய ராசிக் குழு, புளொட் மோகன் குழுவினரைப் போன்றே தற்போதும் தேசத்துரோகிகளுக்கு சிறிலங்கா அரச படையினர் அடைக்கலம் கொடுத்து வருகின்றனர் என்று மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் சாடியுள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவரது பேட்டியில் மேலும் தெரிவிக்கபட்டுள்ளதாவது;

கேள்வி: மட்டக்களப்பு-அம்பாறை பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் சமாதானத் தூதுவர் நாளை மட்டக்களப்பிற்கு விஜயம்

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் நாளை மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகள் பற்றியும், சுனாமிக்கு பின்னர் தோன்றியுள்ள பிரச்சினைகள் பற்றியும் நேரில் பார்வையிடவுள்ளார்.

முன்னதாக சமாதானத் தூதுவர் நேற்று அதிகாலை சிங்கப்பூர் விமான மூலம் கட்டுநாயக்காவை வந்தடைந்தார்.

அங்கிருந்து அவர் புத்தளத்திற்கு விஜயம் செய்தார். நுரைச்சோலையில் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை சந்தித்து உரையாடிய அவர் தொடர்ந்து அரச அதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி அன்னை பூபதி அவர்களின் நினைவாக உண்ணாவிரத நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

தியாக தீபம் அன்னைபூபதி அவர்களின் 17 ஆம் ஆண்டு நினைவு உண்ணா நோன்பு நிகழ்வு இன்று தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பிரதேச ரீதியாக மேற்படி உண்ணா நோன்பு நிகழ்வுகள் இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் நிறைவு செய்யப்படவுள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரம் கூழாவடி, உருத்திரபுரம் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் அப்பிரதேச மக்களால் உண்ணா விரத நோன்பு அனுஷ்டிக்கப்படவுள்ளதுடன் இறுதி நாள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் சமாதானச் செயலகத்துடன் சனாதிபதி சந்திரிகா பேசுவார்

### அமைச்சர் பேரியல் அஷ்ரப் நம்பிக்கை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு உருவாக்குவது தொடர்பில் முஸ்லிம் சமாதானச் செயலகத்துடன் சிறிலங்கா சனாதிபதி பேச்சுவார்த்தை நடாத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக இறுதி முடிவெடுப்பதற்கு முன்னர் முஸ்லிம் சமாதானச் செயலகத்துடன் சிறிலங்கா சனாதிபதி பேச்சுவார்த்தை நடாத்துவாரென வும்,

இதற்கான உறுதிமொழியை சனா திபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு வழங்கியிருப்பதாகவும் தேசிய ஐக்கிய முன்னணிக் கட்சியின் தலைவியும், வீடமைப்பு நிர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# திலீபன் மருத்துவ சேவையின் 16 நிலையங்களில் கடந்த மாதம் 18534 பேர் சிகிச்சை

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையின் மாங்குளம், ஐயன்கன் குளம், கற்சிலைமடு, அளம்பில், பூநகரி, ஆழியவளை நைனாமடு, அடம்பன், புதுக்குடியிருப்பு, புங்குடுதீவு, பன்சேனை நடமாடும் மருத்துவ சேவை, பாட்டாளிபுரம், கதிரவெளி, பிரமந்தனாறு, தங்க வேலாயுதபுரம் ஆகிய பதினாறு நிலையங்களில் கடந்த மாதம் 18534 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அதற்கமைய வைரஸ் காய்ச்சலினால் 2721 பேரும், மலேரியாவினால் 207 பேரும், சுவாசப் பாதை தொற்று நோயினால் 4112 பேரும், சிறுநீர் வழித் தொற்றினால் 134 பேரும், நெருப்புக்காய்ச்சலினால் ஐந்து பேரும், பல்நோயினால் 350 பேரும்,தோல் நோயினால் 708 பேரும், காதுத் தொற்று நோயினால் 126 பேரும், கண் தொற்று நோயினால் 110 பேரும், வயிற்றோட்டம், காரணமாக 602 பேரும், வலிப்பிற்கு 55 பேரும், குடற்புழுத் தொற்றினால் 982 பேரும், இதய நோயினால் 49 பேரும், குருச் சோகையினால் 1134 பேரும், குடற் புண் நோயினால், 381 பேரும், ஒவ்வாமை நோயினால் 403 பேரும், நாரிக்குத்தினால் 456 பேரும், காயங்கள் காரணமாக 1072 பேரும், நாய்கடியினால் 60 பேரும், பாம்புக்கடியினால் 24 பேரும், உயர்குருதியமுக்கம் காரணமாக 284 பேரும், தொய்வினால் 440 பேரும், சத்துக்குறைபாட்டினால் 23 பேரும், மண்டைப் பீலிசம் காரணமாக 02 பேரும், ஏனைய நோய்களினால் 1003 பேரும் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். 26 மகப்பேறுகளும் நிகழ்ந்துள்ளன.

# வரிவிளம்பரம்

## தவறிவிட்டது

13.04.2005ஆம் திகதி யாழ்ப்பாண பிரயாணி ஒருவரிடமிருந்து கையடக்க தொலைபேசி ஒன்று பரந்தனுக்கும் - உப்பளத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறார். (5374)

## 2007 A/L கணித, விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் நடைபெறும் நேரசூசி

பௌதிகவியல் வகுப்பு - வெள்ளி 3.00-4.00 மணி, சனி 8.00-9.00 மணி, 11.00-1.00 மணி (எம்.எஸ்.தவபாலன்), இரசயானவியல் - புதன் 11.00-1.00 மணி, 4.00-5.00 மணி, வியாழன் 11.00-1.00 மணி (எஸ்.சண்), இணைந்த கணிதம் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 4.00-5.00 மணி (எஸ்.சிறிதரன்), உயிரியல்- சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 5.00-6.00 மணி (எம்.நேசன்) இடம்:- கேம்பிறிச் கல்லூரி, கிளிநொச்சி. (நிர்வாகம்) (சி.11780)

## தவறிவிட்டது

பொன்னுச்சாமி - சிவபாக்கியம் (597202830V), பொன்னுச்சாமி-கிஷாந்தன் (852854367V) என்பவர்களுடைய தேசிய அடையாள அட்டைகளும், பயண அனுமதி அட்டை ஒன்றும், வேறு பல முக்கிய ஆவணங்களுடன் 11.04.2005 அன்று மாலை முறிகண்டிக்கும் -தர்மபுரம் பகுதிக்கும் இடையில் பேருந்தில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையிலோ அல்லது கீழ்காணும் முகவரியிலோ ஒப்படைத்துதவுமாறு தயவாகக் கேட்டுக் கொள்ளுகிறோம். அ.பொன்னுச்சாமி, இல:463/10, தர்மபுரம்.

தகவல்: பொ.கிருஷாந்தன்.

## சுதேசி கோழிப்பண்ணை தங்கம் பெறும் தேர்வு

சுதேசி கோழிப்பண்ணையில் இறைச்சிக்கோழி கொள்வனவு செய்தவர்களில் குறி.இல. 036264 தொடர் இல.30267 உடையவிற்பனை அட்டை பெற்ற வாடிக்கையாளர் ஒருமாத காலத்தினுள் சமர்ப்பித்து ஒரு பவுண் தங்கச் சங்கிலியைப் பெற்றுக் கொள்ளவும். சுதேசி கோழிப் பண்ணை, நாவலர் றோட், முள்ளியவளை. (5989)

## இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும் போட்டோக் கொப்பி, லெமனேட்டிங் போன்றவை களை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை கண்டிவீதி, கிளிநொச்சி.T.P.021-2285750. (சி.11598)

## 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்:- கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி. காலம்- சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு- 5.00-6.00 மணி, ஆசிரியர்:- எம்.நேசன் B.Sc(H.B). (சி.11779)

# கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்திய சேவைகள் இணையம், சித்த ஆயுர்வேத மூலிகை உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கம் ஆகியவற்றின் செயற்பாட்டுக்குழு தெரிவிற்கான கலந்துரையாடல் எதிர்வரும் 21 ஆம் திகதியன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி தமிழீழ நிர்வாக சேவை ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட சுதேச ஆயுர்வேத மருத்துவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி விக்ரமன் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)

# அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவின் இறுதி நாள் நிகழ்விற்குப் பொதுமக்கள் ஏற்பாடு

தியாகி அன்னைபூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவின் இறுதி நாள் நிகழ்வுகள் மன்னார் மாவட்டம எங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட ஏற்பாடாகியுள்ளது.

இந்நிகழ்வுகளில் ஒன்றாக இரத்ததானம், சிரமதானப் பணி போன்ற சமூகப் பணிகள் இடம் பெறவுள்ளன. இதேவேளை நேற்று மன்னார் பண்டித்தோட்டம், கீரி போன்ற இடங்களில் உண்ணா விரதமும் பேசாலையில் சிரம தானப்பணியும் இடம் பெற்றுள்ளது. தியாகி அன்னைபூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வுகளை எழுச்சி பூர்வமாக நடத்த ஏற்பாட்டு முன்னோடிக்கலந்துரையாடல் முள்ளியவளைப் பிரதேச அரசியல்துறை செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முல்லைவீரன் தலைமையில் நடைபெற்றது.

கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பணிமனை திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. க.ஜெயபவானி முள்ளியவளை கமநல சேவை திணைக்கள பெரும்போக உத்தியோகத்தர் செல்வி. சு.இராசலட்சுமி முள்ளியவளைப் பிரதேச பொருண்மிய இணைப்பாளர் ஆ.றொபேட் பிரதேச வர்த்தகர் சங்கத் தலைவர் தேவராசா பிரதேச அழககசங்கத் தலைவர் காண்டீபன், கிராம சேவையாளர் மா.நரேந்திரன், பிரதேச அன்னையர் முன்னணித்தலைவி, செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் மாதர் சங்கத்தினர், அரசசார் பற்ற நிறுவனத்தினர் எனப் பெருமளவானோர் கலந்துகொண்ட கலந்துரையாடலில் நிகழ்வு தொடர்பாக வேலைத்திட்ட ஏற்பாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டு சிறப்புக் கருத்துரையினை முள்ளியவளைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முல்லைவீரன் நிகழ்த்தினார்.

அன்னைபூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வில் எழுச்சிக்கூட்டங்கள் நேற்று துணுக்காய் பாடசாலையில் நடைபெற்றது. இன்று ஐயன்கன்குளம் பாடசாலையிலும் நாளை இறுதி நாள் நிகழ்வுகள் மல்லாவி மாவீரர் மண்டபத்தில் நடைபெற பொதுசன ஒன்றியங்களால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

திருமுறிகண்டி தேசிய எழுச்சிப் பேரவையும், முறிகண்டி வர்த்தக சங்கமும் அக்கிராம மக்களும் இணைந்து நேற்று தியாகி அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு தலைவர் நாகேந்திரராஜா தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கிளிநொச்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சிறி ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி பிரதேசப் பொறுப்பாளர் போர்ப்பிரியன் ஏற்றி வைக்க. அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு மாவீரரின் தந்தை பால்ராசா ஈகச்சுடர் ஏற்றி வைத்தார். மலர் மாலையினை வர்த்தகசங்கத் தலைவர் தி.குழந்தைவேலு அணிவித்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து நினைவுரைகளை கிளிநொச்சி பிரதேசப் பொறுப்பாளர் போர்ப்பிரியன் முறிகண்டி இந்து மகாவித்தியாலய அதிபர் கிளிநொச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் நேசன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். இதனைத் தொடர்ந்து உண்ணா நோன்பும் இடம்பெற்றது. (18,24,ச,தீ,ஆ,சோ)

# மன்னாரூடாக நாடு திரும்பிய அகதிகளை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப் பணிப்பு

(மன்னார்)

இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் ஆறு பேர் நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் இந்தியாவின் மதுரை மாவட்டத்திலுள்ள ஆனையூர் அகதி முகாமில் வசித்து வந்தவர்களாவார்.

இவர்களை தலைமன்னார் பொலிசார் மன்னார் பதில் நீதிபதி அவர்கள் முன்னிலையில் முற்படுத்தியபோது இவர்களை சொந்த இடமான முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு, வவுனியா ஈச்சங்குளம், மன்னார் சாவற்கட்டு ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு பணித்துள்ளார்.

இதேவேளை நேற்றுக்காலை மேலும் இரண்டு தமிழ் அகதிகளையும் மூன்று இந்திய மீனவர்களையும் தலைமன்னார் கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் நீதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து இரண்டு இலங்கைத் தமிழ் அகதிகளையும் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு நீதிபதி பணித்ததோடு ஏனைய மூன்று இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (18)

# உ.ம.அபிவிருத்தி நிறுவனத்தால் செம்பியன்பற்றில் தையல்ப் பயிற்சி

(நமது நிருபர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் செம்பியன் பற்றில் தையல் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நாள் நிகழ்வு நாளை முற்பகல் 10.00 மணிக்கு செம்பியன்பற்றில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கி.அபி.வங்கியால் மார்ச் மாதம் 199 பேருக்கு தொழில் முயற்சிக்கு ஒன்றரைக் கோடி ரூபா கடன்

(கிளிநொச்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கியால் கடந்த மாதம் 199 பயனாளிகளிற்கு ஒரு கோடியே 55 இலட்சத்து 67 ஆயிரத்து 477 ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

சுயதொழில் கடனாக 122 பயனாளிகளிற்கு 39 இலட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபாவும், தொழில் துறை மேம்பாட்டுக்கடனாக 17 பயனாளிகளிற்கு 22 இலட்சத்து ஐயாயிரம் ரூபாவும், 19 பயனாளிகளிற்கு ஆறு இலட்சத்து 76 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரங்களும், எட்டுப் பயனாளிகளிற்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்களும், 14 பயனாளிகளிற்கு ஆறு இலட்சத்து 42 ஆயிரத்து 650 ரூபா பெறுமதியான சூரிய மின் கலத் தொகுதிகளும், ஏனைய கடன்களாக 19 பயனாளிகளிற்கு 79 இலட்சத்து 76ஆயிரத்து 327 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிராமிய அபிவிருத்தி வங்கியின் திருகோணமலை மூதூர் கிளையில் 'சுனாமி' ஆழிப் பேரலைகளின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு சுயதொழிலை மேம்படுத்துவதற்காக 20 பயனாளிகளிற்கு ஈருருளிகள் கடன் வங்கியால் வழங்கப்பட்டதுடன் கடற்றொழில் மேற்கொள்ளும் ஐந்து பயனாளிகளிற்கு தலா 25 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளதுடன் கிராமிய அபிவிருத்தி வங்கி மன்னார் கிளையில் நகை அடைவுசேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிராமிய அபிவிருத்தி வங்கியின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது. (15)

# திலீபன் மருத்துவ மனையின் மூன்றாம் ஆண்டு நிறைவு நிகழ்வு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தின் ஐயன்குளம் பகுதியிலுள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவ மனையின் மூன்றாம் ஆண்டு நிறைவு நிகழ்வு இன்று பிற்பகல் 4.30 மணிக்கு சிறப்புற இடம் பெறறவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டினை தியாக தீபம் திலீபன் மருத்துவ மனையின் அபிவிருத்திக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் இன்று தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவு தினம் ஐயன்குளம் பாடசாலை மண்டபத்தில் உணர்வு பூர்வமாக நடைபெறவுள்ளது என தியாக தீபம் திலீபன் மருத்துவ மனையின் அபிவிருத்தி குழுவினர் தெரிவுத்துள்ளனர். (24)

# மலேசியத் தூதுவர் இன்று திருமலை விஜயம்

(திருகோணமலை)

சிறிலங்காவுக்கான மலேசியா நாட்டின் தூதர் நஸிரா ஹச்சேன் திருகோணமலைக்கு இன்று விஜயம் செய்யவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் கிண்ணியா அல் அக்ஸா கல்லூரியில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வில் மலேசியாவின் தூதர் பிரதம அதிதியாகப் பங்கு பற்றுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நிகழ்வை கிண்ணியா செரண்டிப் பவுண்டேஷன் ஒழுங்கு செய்துள்ளது. தையல் இயந்திரங்களை அப்துல் அஸிஸ் முகமது அனல் அன்பளிப்பாக வழங்குவார். (25)

## — சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு —

# இல.செஞ்சிலுவைச் சங்கம் புத்தாடைகள் வழங்கியது

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட ஈச்சிலம்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கல்லடி, சூரநகர், இலங்கைத் துறைமுகத்துவாரம், புன்னையடி ஆகிய இடங்களில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 956 குடும்பங்களுக்கு புத்தாண்டையொட்டி புத்தாடைகள் மற்றும் உணவுப் பொருட்கள் கொண்ட பொதிகளை இலங்கை செஞ்வசிலுவைச் சங்கத் திருகோணமலை மாவட்டக்கிளை வழங்கியது.

அந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய செயலாளர் நிமால் குமார், செஞ்சிலுவை செம்பிறை சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதி சஞ்சீவ் குமார், கப்லி, ஹொங்கொங், செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த என்.காஸபச்சோ மற்றும் கிளை உத்தியோகத்தர் மணிவண்ணன், சுபாஷ்கர் ஆகியோர் பங்கு பற்றினர். (25)

# புதிய போப்பாண்டவர் தெரிவு முதல் முடிவு இன்று இரவு வெளியாகும்

(வத்திக்கான்)

**புதிய போப் தேர்வில் முதல் வாக்கெடுப்பு முடிவு இன்று இரவு 10.30 மணிக்கு வெளியிடப்படும் என அறிவிக்கப்படுகிறது. அப்போது வெள்ளைப்புகை வந்தால் முதல் வாக்கெடுப்பிலேயே புதிய போப் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அர்த்தப்படுமென வத்திக்கான் தெரிவித்துள்ளது.**

இதற்காக வத்திக்கான் நகரில் உள்ள சிஸ்டைன் தேவாலயத்தில் இன்று இரவு 8 மணிக்கு கர்தினால்கள் கூடுகிறார்கள். புதிய போப் தேர்ந்தெடுக் கப்படும் வரை அவர்கள் அந்த தேவாலயத்திலேயே தங்கியிருப்பார்கள்.

புதிய போப் தேர்தல் நாள் கணக்கில், வாரக் கணக்கில் மாதக் கணக்கில் ஏன் வருடக் கணக்கில் கூட நீடிக்கலாம். கடந்த நூற்றாண்டில் ஒரு போப்பை தேர்ந்து எடுக்க மூன்று ஆண்டுகள் 9 மாதங்கள் தொடர்ந்து தேர்தல் நடந்தது.

புதிய போப் தேர்ந்து எடுக்க மூன்றில் இரண்டு பங்கு 78 கர்தினால்கள் ஆதரவு வேண்டும் யாருக்கும் மூன்றில் இரண்டு பங்கு வாக்கு கிடைக்காவிட்டால் பூரண பெரும்பான்மை வாக்குப் பெறுபவர் புதிய போப்பாக தேர்ந்தெடுக்கப் படுவார்.

யாருக்கு பூரண பெரும்பான்மை கிடைக்காவிட்டால் மறுபடியும் மறுபடியும் வாக்குப் பதிவு நடக்கும்.

தினம் காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் வாக்குப் பதிவு நடைபெறும். காலையில் நடக்கும் வாக்குப் பதிவின் முடிவு மாலை 3.30 மணிக்கும் மாலையில் நடைபெறும் வாக்குப் பதிவு முடிவு இரவு 10.30 மணிக்கும் தெரிவிக்கப்படும்.


புதிய போப் தேர்ந்தெடுக்கப் பட்டால் சிஸ்டைன் தேவாலயத்தில் மேல் உள்ள புகைப் போக்கி வழியாக வெள்ளை நிறப் புகை வெளியிடப்படும் வாக்குப் போட பயன்படுத்தப்பட்ட சீட்டுகளை வெள்ளை நிறப்புகை வருவதற்கான இரசாயன கலவையுடன் சேர்த்து எரித்து இந்தப் புகை வெளியிடப்படும். அத்தோடு சிஸ்டைன் தேவாலயத்தில ஆலய மணியும் ஒலிக்கும்.

வாக்கெடுப்பில் புதிய போப் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் அந்தப் புகை போக்கி வழியாக கரும்புகை வெளியிடப்படும். வாக்கு போட பயன் படுத்த சீட்டுக்களை கரும்புகை வெளிவருதற்கான இரசாயனக் கலவையுடன் சேர்த்து எரித்து இந்தப் புகை வெளியிடப்படும்.

மூன்று நாளில் புதிய போப் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் இடையே ஒரு நாள் வாக்குப் பதிவு நிறுத்தப் பட்டு பிரார்த்தனை நடத்தப்படும். பின்னர் மறுநாளில் இருந்து அடுத்த மூன்று நாளுக்கு தினம் இரண்டு முறை வாக்கெடுப்பு நடைபெறும். புகைப் போக்கி வழியாக வெள்ளைப் புகை வந்து ஆலய மணியும் ஒலித்தால் புதிய போப் தேர்ந்தெடுக்கப் பட்டது உறுதியாகி விடும். பின்னர் புதிய போப் புனித பீட்டர்ஸ் சதுக்கத்துக்கு அழைத்து வரப்பட்டு அங்கு திரண்டு இருக்கும் மக்களிடையே அறிமுகப்படுத்தப்படுவார். பின்னர் சொற்பொழிவாற்றுவார். போப்பை தேர்தெடுப்பதற்கான கர்தினால்கள் கூட்டம் இன்று இரவு 8 மணிக்குத் தொடங்குகின்றது. அனைவரும் உறுதி மொழி எடுத்த பின் முதல் வாக்கெடுப்பு நடக்கும். அதன் முடிவு புகை வடிவத்தில் அன்று இரவு 10.30 மணிக்கு வெளியிடப்படும்.



மொசூலில் இருந்து 25கி.மீ அப்பாலுள்ள சலாமியா கிராமத்தில் தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டவர்களிற்குக் கண்களைக் கட்டும் அமெரிக்கப் படையினர்.



தலிபான்களின் தாக்குதலில் சேதமடைந்த எரிபொருட் தாங்கியின் சிதைவுகளை அகற்றும் ஆப்கானிஸ்தான் படையினர்

## நிதி ஒதுக்கீடு குறைப்பு புஷ்சுக்கு எம்.பிக்கள் எதிர்ப்பு

(வோஷிங்டன்)

போதைப்பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கைக்கு அமெரிக்க அரசு ரூ.1,500 கோடி ஒதுக்கீடு செய்து வந்தது. இதனை ரூ.500 கோடியாகக் குறைக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் முடிவு செய்துள்ளார். இதற்கு ஆளுங்கட்சி மற்றும் எதிர்க் கட்சி எம்.பிக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.


41 எம்.பிக்களும், எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 59 எம்.பிக்களும் கையெழுத்திட்டு ஜோர்ஜ் புஷ்சுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதில் நிதியை குறைத்தால் போதைப் பொருள் கடத்தலை ஒழிக்கும் பணி முடங்கிப் போய் விடுமென்று குறிப்பிட்டுள்ளனர்.

## பணயக் கைதிகளான ஷியா முஸ்லிம்களை மீட்க அமெரிக்க-ஈராக் படையினர் முயற்சி

ஈராக்கின் மத்திய பகுதியை முற்றுகையிட்டு சுனி முஸ்லிம்களினால் பிடிக்கப்பட்டு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த 150 ஷியா முஸ்லிம்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை அமெரிக்க மற்றும் ஈராக்கிய துருப்பினர் மேற் கொண்டுள்ளனர்.

இது பற்றி உள்துறை தேசிய பாதுகாப்பு அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில் தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதலை மேற்கொண்டு வந்ததால் பாக்தாத்தின் மரணத்தின் வாயிலை நெருங்கிக் கொண்டிருந்த பகுதி ஈராக்கிய மற்றும் அமெரிக்க பல் தேசிய படைகளின் உதவியுடன் தற்போது கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருப்பதாகக் கூறினர்.

பணயக் கைதிகளாக சிறை பிடிக்கப்பட்டிருப்பவர்களை தேடும் முகமாக பலபகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படுகின்றதென்று டுபாயில் இருந்து செயற்படும் அரேபிய தொலைக் காட்சிசிக்குப் பேட்டியளிக்கையில் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.



பீஜிங்கில் ஜப்பான் தூதரகத்தினை இராணுவப் பொலிசார் காவல் காக்கின்றனர். சீனாவில் ஜப்பான் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை எதிர்பார்த்து ஏராளமான பொலிசார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

## கொபிஅனானின் குற்றச்சாட்டு அமெரிக்காவும் இங்கிலாந்தும் நிராகரிப்பு

(லண்டன்)

ஐ.நாவின் குற்றச்சாட்டை அமெரிக்காவும், இங்கிலாந்தும் மறுத்துள்ளன.

ஈராக்கில் சதாம் உஷேன் ஆட்சி நடந்த போது உணவுக்கு எண்ணை விநியோகத்திட்டத்தில் முறைகேடு நடந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. இதில் ஐ.நா பொதுச் செயலாளர் கொபி அனானின் மகனுக்கு லஞ்சம் கைமாறியதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில் கொபி அனான் "அமெரிக்காவும் இங்கிலாந்தும், இதனைச் சரிவர கண்காணிக்கத் தவறி விட்டன என்று குற்றம் சாட்டியிருந்தார். கொபி அனானின் இந்தக் குற்றச்சாட்டை அமெரிக்காவும் இங்கிலாந்தும் மறுத்துள்ளன. இங்கிலாந்து அமைச்சர் ஜேக்கப் ஸ்டேன் கூறுகையில் " கப்பல் மூலம் கடத்தல் நடந்ததா என்பதை மட்டும் எங்களால் கண்காணிக்க முடியும் என்று தெரிவித்தார். அமெரிக்காவும் இதே கருத்தை தெரிவித்துள்ளது.




ஈராக்கில் அல் செனக் பாலத்தினருகில் உள்ள எச்சரிக்கை குறியீட்டின் முன்னால் காவலில் நிற்கும் ஈராக் படையினர்.

## ஐ.நா.வில் உறுப்பினர் உரிமை செனகல் தீவிர முயற்சி

ஐ.நா. பாதுகாப்பு சபை நிரந்தர உறுப்பினர் எண்ணிக்கையை விரிவு படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்படி அதிகரிக்கப்பட்டால் ஆபிரிக்காக் கண்டத்தில் இரு நாடுகளுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்தப் பதவிகளுக்காக கென்யா, நைஜீரியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் போட்டி போடுகின்றன. இந்த வரிசையில் செனகல் நாடும் மோதுகிறது. அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் சைக்திடினே காடியா கூறும் பொது ஐ.நா. சபை பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் உரிமை கோருவோம் என்று கூறினார்.

## மாடிக்கட்டடம் இடிந்து விபத்து பலியானோர் எண்ணிக்கை 61 ஆக உயர்வு

(டாக்கா)

வங்க தேசத்தில் ஒன்பது மாடிக்கட்டடம் தரை மட்டமான சம்பவத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 61ஆக உயர்ந்துள்ளது.

கடந்த ஐந்து நாட்களுக்கு முன்பு கட்டடத்தில் இருந்த பாய்லர் திடீரென வெடித்தது இதனால் ஒன்பது மாடிக் கட்டடம் அடியோடு தரை மட்டமானது. கட்டடத்தின் உள்ளே பணியில் ஈடுபட்டு இருந்தவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டனர். பொலிசாரும், தன்னார்வத் தொண்டு ஊழியர்களும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இடிபாடுகளில் சிக்கி இருக்கும் உடல்களை மீட்டு அடையாளம் காணும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதுவரை 61 பேரின் உடல்களை அடையாளம் காணப்பட்டுள்ளன. பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் உயரக்கூடுமென அஞ்சப்படுகின்றது.

## லெபனானின் புதிய பிரதமராக சிரிய ஆதரவு தொழிலதிபர்

லெபனானின் புதிய பிரதமராக சிரிய ஆதரவு தொழிலதிபர் நஜீப் மிகாட்டி (49) சனிக்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

லெபனானின் சிரிய ஆதரவு பிரதமர் ஓமர் கறொமெஹ் பெப்ரவரி இறுதியில் பதவி விலகியதை அடுத்து அங்கு அரசியல் ஸ்திரத்தன்மை குலைந்து போயுள்ளது. இந்நிலையில் அமைச்சரவையை ஏற்படுத்தி புதிதாகத் தேர்தலை நடத்தி அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் பொறுப்பைக் மிகாட்டி ஏற்றுள்ளார். சிரிய அதிபர் பாஷா ஆல்-ஆஸாதீன் குடும்ப நண்பர் மிகாட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

# மூதூர் கங்குவேலி நீர்ப்பாசனக் குளத்தினுள் அத்துமீறி சிங்களவர்கள் நெற்செய்கை!

## – தடுத்து நிறுத்த அவசர வேண்டுகோள் –

(திருமலை)

**மூதூர்ப் பிரதேசத்தில் தமிழர் பகுதியிலுள்ள கங்குவேலிக்குளத்தினுள் அருகிலுள்ள தெஹிவத்த கிராமத்தைச் சேர்ந்த சிங்களவர்கள் சிலர் அத்துமீறிப் பிரவேசித்து நெற்செய்கையில் ஈடுபட்டு வருவதால் இக் குளத்தின் கீழ் நூற்றுக்கணக்கான ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வரும் நெற்செய்கையைக் கைவிடவேண்டிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.**

இப்பிரச்சினை அப்பகுதியில் வன்முறை ஒன்றைத்தோற்றுவிக்கும் அளவிற்குக் கூர்மையடைந்துள்ளதாகவும் கங்குவேலி பொதுமக்களும், கங்குவேலிப்பிரதேச பொது அமைப்புக்களின் முக்கியஸ்தர்களும் முறையிட்டுள்ளனர்.

அம்முறைப்பாட்டினைத் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுக்கு திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச்சங்கம் அனுப்பிவைத்துள்ளது. கங்குவேலி குளத்தினுள் அத்துமீறிய வேளாண்மைச் செய்கையையும் வாய்க்கால் வெட்டுவதையும் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச்சங்கத்தின் செயலாளர் ப.கந்தசாமி, பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தனைக் கேட்டுள்ளார்.

கங்குவேலிக் குளத்தினுள் .அத்துமீறிய நெற்செய்கை முயற்சி முன்னரும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் இரு இனங்களுக்குகிடையே முரண்பாடுகள் ஏற்பட்டு இனக்கலவரமாக மாறும் நிலை உருவாகியபோது குளத்தினுள் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவது தடுத்து நிறுத்தப்பட்டது. இப்போது மீண்டும் ஒருசிலர் குளத்தினுள் வாய்க்கால் வெட்டி நெற்செய்கை மேற்கொள்வதால் இனக்கலவரம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் சங்கச்செயலாளர் கந்தசாமி தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மாதம் 22ஆம் திகதி தெஹிவத்த கிராமத்தைச் சேர்ந்த சிலர் கங்குவேலிக்குளத்தினுள் பிரவேசித்து வாய்க்காலை வெட்டி அத்து மீறி நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளார்கள். வெட்டப்பட்ட வாய்க்காலை மூடி அத்துமீறி நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதைத் தாமதமின்றித் தடுக்க வேண்டும். இப்பிரச்சினைக்கு நீதி,நியாயமான தீர்வு காணப்படாவிட்டால் பொதுமக்கள் நேரடியாகத் தலையிட்டு எமது குளத்தினுள் அத்துமீறி வாய்க்கால் வெட்டி நெற்செய்கையில் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்றும் கங்குவேலி பொதுமக்களும், கிராமத்தின் பொதுஅமைப்புக்களின் முக்கியஸ்தர்களும் கையெழுத்திட்டு அனுப்பிய மகஜரில் தெரிவித்துள்ளார்கள்.

இந்த அத்துமீறல் நடவடிக்கை சமாதானச் சூழலைச் சீர்குலைப்பதாக அமைவதைத் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்கும்படியும் மகஜரில் கோரப்பட்டுள்ளது. (25)

# அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதம்

(மல்லாவி)

தியாகி அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு துணுக்காய் பிரதேசத்தில் கோட்டை கட்டியகுளம் கிராமத்தில் அடையாள உண்ணாவிரதம் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு இடம்பெற்றது.

கோட்டை கட்டியகுளம் பொதுமண்டபத்தில் இடம்பெற்ற இவ் உண்ணாவிரத நிகழ்வில் பொதுச்சுடரினை கோட்டை கட்டிய குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ஏற்றிவைக்க, திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை அம்பலப் பெருமாள் கிராமஅபிவிருத்திச் சங்கத்தலைவர் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து அம்பலப்பெருமாள்குளம் தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் மரியதாஸ் தலைமையில் அகவணக்கத் துடன் உண்ணாவிரதம் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் நினைவுரையினை தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் இரத்தினேஸ்வரன் கிராமஅபிவிருத்திச் சங்கச் செயலர் ஆகியோர் ஆற்றினர். சிறப்புரையினை துணுக்காய்ப் பிரதேச அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் புனிதன் ஆற்றினார் பிற்பகல் 2.00 மணியளவில் உண்ணா விரதம் நிறைவுசெய்யப்பட்டது. இந்நிகழ்வில் கோட்டை கட்டிய குளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பலரும் பொது அமைப்புக்கள் என்பனவும் கலந்து கொண்டன. (24)

# விவசாயக்கடனுக்கு விண்ணப்பிக்குக

(கிளிநொச்சி)

2004/2005 கால போக விவசாயக் கடன் பெற்று முழுமையாக மீளச் செலுத்திய பயனாளிகள் 2005 சிறுபோக விவசாய கடனிற்கான விண்ணப்பங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர் ஊடாக உரிய கிராம அபிவிருத்தி வங்கிக் கிளைகளிற்கு அனுப்பிவைத்து சிறுபோக விவசாய கடனினைப் பெற்றுக்கொள்ளுமாறு கிராமிய அபிவிருத்தி வங்கி பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (15)

# துணுக்காயில் இடிதாங்கியின்றி வருடாந்தம் பொதுமக்கள் பாதிப்பு!

## -இடிதாங்கிக் கருவியை அமைக்க வலியுறுத்து

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசத்தில் இடிதாங்கியின்றி வருடாந்தம் பலர் உயிரிழப்புக்களுக்கும், பலர் எரிகாயங்களுக்குமுள்ளாகி வரும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. ஆகவே இப்பிரதேசத்திற்கு இடிதாங்கிக் கருவியைப் பொருத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி துணுக்காய்ப் பிரதேசத்தில் 90ஆம் ஆண்டுக்கு முன்பு இடிதாங்கிக் கருவியொன்று இருந்ததாகவும், இதன் மூலம் இப்பகுதியைப் பாதுகாத்துவந்ததாகவும் தற் போது இவ் இடிதாங்கிக் கருவி பொருத்திய இடம் கூடத் தெரியாத நிலை காணப்படுகின்றது எனவும் இப் பிரதேச வாழ்மக்கள் தெரிவித்தனர். இதனால் கடந்த வருடம் மூன்றாம் யுனிற் மல்லாவிப் பகுதியில் ஒருவர் பலியானதும், பலர் எரிகாயங்களுக்கு உள்ளான சம்பவத்துடன் அண்மையில் மல்லாவி அனிஞ்சியன்குளம் பகுதியில் மண் ஏற்றிக்கொண்டிருந்தவர்கள் மீது இடி மின்னல தாக்கி ஒருவர் பலியாகியும், மூவர் எரிகாயங்களுக்கு உள்ளாகியும் உள்ளனர்.

இதனால் துணுக்காய்ப் பிரதேசத்திற்கு ஒரு இடிதாங்கிக் கருவி ஒன்றினைப் பொருத்தி மின்னல் தாக்கத்தில் இருந்து உயிர்காக்க உரிய திணைக்களங்கள் சம்பந்தப்பட்ட துறை சார்ந்தவர்கள் கவனம் எடுக்க வேண்டும் என மக்கள் கேட்கின்றனர். (24)

# மருத்துவ உபகரணங்கள் வழங்கல்

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையின் அபிவிருத்திக்குச் சமூகப் பொருளாதார சூழல் அபிவிருத்தி நிறுவனம் சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களையும், தளபாடங்களையும் வியாழனன்று காலை 10.00 மணிக்கு முல்லை.மாவட்ட வைத்தியசாலையில் வைத்து வழங்கியுள்ளது. முல்லை.மாவட்ட பிரதிமாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் ஜெயகுலராஜா தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் அவர் தெரிவிக்கையில்; இந்த நிறுவனத்தைப் போன்று ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்த மாவட்ட வைத்தியசாலையின் வளர்ச்சிக்குப் பங்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி ஜி.சி.தர்மேந்திரா நன்றி தெரிவித்தார். இந் நிகழ்வில் முல்லை. மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் ம.ரங்கன், சமூகப்பொருளாதர சூழல் அபிவிருத்தி நிறுவனப் பணியாளர்கள், முல்லைப் பிரதேச வர்த்தகப் பரதிநிதிகள், முல்லை.மாவட்ட வைத்தியர்கள், பணியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# கண் சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்ய ஏற்பாடு

புதுக்குடியிருப்பிலுள்ள பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் கண் சத்திரசிகிச்சை குறிப்பாக கண்ணில் பூவிழுதலிற்குரிய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கமைய நோயாளர்களைத் தெரிவு செய்வதற்கான கண்கிளினிக் நடைபெறவுள்ள இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய முத்துஐயன் கட்டு இடதுகரைச் சந்தியில உள்ள நடமாடும் மருத்துவ நிலையத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 8.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரையும் பிரமந்தனாறு திலீபன் மருத்துவ நிலையத்தில் 21 ஆம் திகதி காலை 8.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை நோயாளர் தெரிவிற்கான கிளினிக் நடைபெறவுள்ளது.

### நன்னீர் மீன்பிடிக்கு கடன் வழங்கல்

நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவ்ருத்திவங்கி மன்னார்க் கிளையால் பெரியமடு குளத்தின் கீழ் தொழில் செய்யும் 29 வழமை தாரர்களிற்கு அவர்களின் தொழிலை மேம்படுத்துவதற்காக 1,15,000 ரூபாவினைக் கடனாக வழங்கியுள்ளது. இதேவேளை மீள் குடியமர்ந்து வரும் முஸ்லிம் தொழிலாளர்களும் இது விடயத்தில் பயனடைந்து வருகின்றமை குறிப்பிடத்தககது. (15)

### பழைய மாணவரால் மரநடுகை!

கிளிநொச்சி மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் மரநாட்டு விழா கல்லூரி வளாகத்தில் நாளை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. வனவளப்பிரிவின் அனுசரணையுடன் மேற்படி மரநாட்டுவிழா இடம பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### திருமலையில் புலிகளின் குரல்

(திருமலை)

புலிகளின்குரல் வானொலி தனது சேவையைத் திருகோணமலை மாவட்டத்திற்கும் விஸ்த்தரித்துள்ளது. "புலிகளின் குரல்" நிகழ்ச்சிகள் திருகோணமலையில் 104 எப்.எம் அலைவரிசையில் தெளிவாகக் கேட்கக் கூடியதாக வுள்ளது. (25)

### தையல் பயிற்சி ஆரம்ப நிகழ்வு

கட்டைக்காடு கிராம பொதுமண்டபத்தில் தையல் பயிற்சி ஆரம்ப நிகழ்வு நாளை காலை 11.00 மணிக்கு இடம் பெறவுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதியுதவியுடன் கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால இத் தையல் பயிற்சி நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டொல்பினை வாடகைக்கு அமர்த்தி கடத்தும் முயற்சி தோல்வி

(வவுனியா செய்தியாளர்)

கொழும்பில் இருந்து வவுனியாவிற்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட டொல்பினைக் கடத்தும் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

கடந்த வெள்ளி கொழும்பில் இருந்து வவுனியா செட்டிகுளம் செல்வதற்காக ஒரு இளைஞர் குழு டொல்பின் ரக வாகனம் ஒன்றை வாடகைக்குக் கேட்டுள்ளது. வான் சாரதி அவர்களை ஏற்றிக் கொண்டு வவுனியாவிற்கு வந்து பின் மன்னார் வீதியூடாகச் சென்று பூவரசங்குளம் செட்டிகுளம் வீதியில் சென்று கொண்டிருக்கும்போது இரவு நேரம் ஆகிவிட்டது. இவ் வேளையில் பின்புறமாக இருந்த நபர் சாரதியின் மீது கத்தியால் பலமுறை குத்தினார். சாரதியின் மீது 4,5 குத்துக்கள் வீழ்ந்த நிலையில் தடுமாறிய சாரதி கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வான் விபத்திற் குள்ளானபோது வானின் கண்ணாடிகள் உடைந்து நொருங்கியுள்ளன. இவ் வேளையில் கத்திக்குத்திற்கு இலக்காகிய சாரதியான ஜீவச்சந்திரன் (வசந்தன்) (வயது 29) என்பவர் வானை விட்டு இறங்கித் தப்பியோடியுள்ளார். வான் விபத்திற்குள்ளான மையால் கடத்தல்காரர்களால் வானை எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டமையால் அவர்களும் வானை அவ்விடத்திலேயே விட்டு விட்டு தலைமறைவாகியுள்ளனர்.

படுகாயமடைந்த ஜீவச்சந்திரன் வவுனியா பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இவர் பொலிசாருக்கு கொடுத்த தகவலின் அடிப்படையில் செட்டிகுளம் பொலிசார் வானை மீட்டு எடுத்துள்ளனர். கடத்தல்காரர்களைத் தேடும் முயற்சியில் தாம் ஈடுபட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிசார் தெரிவித்துள்ளனர். (10)



சுவிற்சர்லாந்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அன்னை பூபதி அவர்களின் நினைவு நிகழ்வில்.

## வடமராட்சியில் 'றீடோ' உளவள ஆற்றுப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச வாழ்இளைஞர் யுவதிகளுக்கான உளவள ஆற்றுப்படுத்தல் சேவையினை "றீடோ' என்ற சர்வதேச அரசசார்பற்ற அமைப்பு மேற்கொண்டு வருகிறது.இதற்காக இவ்வமைப்பினால் 19 பேர் கொண்ட உளவளத்துணை வழங்குனர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.இக்குழுவினர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று உளவள சேவைகளை வழங்கி வருகின்றனர். (33)

## உழவு இயந்திரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாய்ப் பிரதேச சபையினரால் மேற்கொள்ளபட்டுவரும் நகரசுத்திகரிப்பு நடவடிக்கைகளை விஸ்தரிக்கவென "நிகொட்" திட்டத்தின்கீழ் மானிப்பாய்ப் பிரதேசசபைக்கு உழவு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இம் மானிப்பாய்ப் பிரதேச சபையின் குடிநீர் வழங்கல் வசதிகளை மேம்படுத்தவென நிகொட் திட்டத்தின் கீழ் தண்ணீர்த் தாங்கிகள் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரம் என்பனவும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

## சிற்றூர்தி தீவைப்புச் சம்பவத்தால் யாழ்.-முகமாலை சிற்றூர்திச்சேவை நிறுத்தம்

### விசாரணை நடத்தவும் சிற்றூர்திச்சேவைச் சங்கம் கோரிக்கை

(தென்மராட்சி)

**யாழ்ப்பாணம்-முகமாலை சிற்றூர்திச் சேவைகள் காலவரையறையின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டடுள்ளது**

இருபாலை சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதிவிபத்தொன்றைத் தொடர்ந்து இனந்தெரியாதோரால் சிற்றூர்தி எரியூட்டி சாம்பலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே முகமாலை- யாழ்ப்பாணம் ஊடான தனியார் போக்குவரத்து சேவைகள் அனைத்தும் காலவரையறையின்றி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாகத் தென்மராட்சி சிற்றூர்தி சேவைச்சங்கம் அறிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணைகள் நடத்தப்படுவதுடன் இப்படியான தற்செயலாக இடம்பெறுகின்ற விபத்தின் போது பெறுமதி மிக்க வாகனங்கள் எரிக்கப்படுவதும் நடத்துனர்கள் ஓட்டுனர்கள் தாக்கப்படுவதும் ஏற்கக்கூடிய செயல் அல்ல என்றும் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்த பின்பே போக்குவரத்துச் சேவைகளை தொடர்வது பற்றிசங்கம் முடிவு செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## வேல்ட்விஷன் 376 வீடுகள் அமைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சிப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக "வேல்ட்விஷன்" என்ற சர்வதேச அரசசார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் 376 நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதில் பொற்பதியில் 100 வீடுகளும், போக்கறுப்பில் 24 வீடுகளும், நாகர்கோவிலில் 26 வீடுகளும், வத்திராயனில் 226 வீடுகளுமாக 376 வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன.

இவ் வீடுகள் யாவும் சுனாமியால் வீடிழந்த மக்களுக்காக அமைக்கப்படவுள்ளன.

இதற்கான திட்டமிடல்கள் தற்பொழுது இடம்பெறுகின்றன. (33)

## சிறுமிக்கு சிகிச்சையளிக்க தே.எ.பேரவை நிதி உதவி

(நல்லூர்)

இருதய நோயினால் பாதிக்கப்பட்ட சிறுமியின் வைத்திய சிகிச்சைக்காக யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் ஒரு லட்சம் ரூபா நிதியினை கொடுத்துதவியுள்ளனர்.

துன்னாலை மேற்கைச் சேர்ந்த செல்வி குணசேகரம் மெடோரினா என்ற எட்டுவயதுச் சிறுமியின் சத்திர சிகிச்சைக்கான செலவின் ஒரு பகுதியாக இத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியினை தேசிய எழுச்சிப் பேரவையின் சார்பில் செயலரான சொலமன் சூ. சிறில்,பொருளாளர் க. சிவராசா ஆகியோர் பெற்றோரிடம் வழங்கியுள்ளனர். (41)

## தென்மராட்சியில் எழுச்சிபூர்வமாக அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு

(தென்மராட்சி)

அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் தென்மராட்சிப் பிரதேசம் எங்கும் நேற்று உண்ர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கொடிகாமம் சாவகச்சேரி, கைதடிப் பிரதேசங்களில் நடைபெற்ற நினைவு தின நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரியில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சி வணிகர் ஒன்றியங்களின் தலைவர் சற்குணராசா அவர்களின் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கான மலர்மாலையினை சாவகச்சேரி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்பிரியன் அணிவித்தார். சிறப்புரையை தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த பேனாட், சாவகச்சேரி வணிகர் மன்றத்தலைவர்வீ .மகாலி'ங்கமும் நிகழ்த்தினர். நன்றியுரையினை வணிகர் மன்றச் செயலாளர் பாலேந்திரா நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகர் முச்சக்கரவண்டி சங்கத் தலைவர் தங்கராசா நகரக் கிராம அலுவலர் இராசரத்தினம் மற்றும் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் வர்த்தகர்களும் , மாணவர்களும் கலந்து கொண்டனர். (28)

## "மே" தினம் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொள்ளக்கோரிக்கை

(நல்லூர்)

எதிர்வரும் மே நாளை சிறப்பாக முன்னெடுப்பதற்கான விசேட கலந்துரையாடல் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை விளக்குவதற்கான கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆதலால் இக் கூட்டத்தில் அனைத்து தொழிற்சங்கத்தலைவர்கள், பிரதிநிதிகளையும், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களையும், பொது அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள் சனசமூக நிலையங்கள் பல்வேறுவகை சங்கங்கள் போன்றவற்றின் தலைவர், செயலாளர்கள் இலங்கை தமிழாசிரியர் சங்கப் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட மே தின ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (41)

## உசனில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட வீடுகளை மீட்க தொடர்போராட்டம்

(தென்மராட்சி)

உசனில் சிறிலங்காப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கும் வீடுகளை மீட்கும் போராட்ட நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடப் போவதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்காக அடுத்தடுத்து கட்டம் கட்டமாக பல போராட்டங்களை தாம் நடத்த இருப்பதாகவும் கடந்த காலங்களில் இந்த வீடுகளை விட்டுப் படையினர் வெளியேறுவது தொடர்பில் வழங்கப்பட்ட உறுதி மொழிகள் எவையும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்றும் அதிகாரிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் எதனையும் செலுத்தவில்லை என்றும் கடந்த காலப் போராட்டங்கள் பலவும் அதிகாரிகளின் வாக்குறுதிகளை நம்பி தாம் கைவிட்டதாகவும் இனி வரும் காலங்களில் இப்படியான வாக்குறுதிகளை தாம் நம்பப்போவதில்லை என்றும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

## வாண்மை விருத்தி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி கல்விவலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆரம்பக் கல்விப்பிரிவு ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு ஒன்று இன்று தொடக்கம் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு இடம் பெறவுள்ளது.

இதில் புதிதாக நியமனம் பெற்ற மற்றும் ஏற்கனவே கடமையாற்றி வரும் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (33)

## ஊரெழு-பொக்கணைக் கிராமத்தை மாதிரிக் கிராமமாக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஊரெழுப் பகுதியிலுள்ள பொக்கணைக் கிராமத்தை துரித திட்டத்தின் அடிப்படையில் மாதிரிக் கிராமமாக உருவாக்க வேண்டுமென யாழ். அரசாங்க அதிபரிடம் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இக்கிராமத்திற்கென சீரான பாதை வசதிகளோ, மின்சார வசதிகளோ, குழந்தைகள் கல்வி பயில்வதற்காக முன்பள்ளி வசதிகளோ, விளையாட்டு மைதானவசதிகளோ இது வரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இக்கிராம மக்கள் கூலி வேலை செய்தே தமது வாழ்க்கையினை நடத்தி வருகின்றனர் இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் வறுமையான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். எனவே இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இக்கிராமத்தினை அபிவிருத்தி செய்து தர வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

## பங்களாதேஷ் புனர்வாழ்வு அமைப்பினால் யாழ். இல் சமூக பொருளாதார அபிவிருத்திகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பங்களாதேஷ் புனர்வாழ்வு அமைப்பு முன்வந்திருக்கிறது.

இவ் அமைப்பினால் யாழ். குடாநாட்டில் சுயதொழில் விரிவாக்கம், சுகாதார மேம்பாடு, சமூகமேம்பாடு போன்ற வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப் படவிருக்கின்றன.

இதற்காக கடந்த 13 ஆம் திகதி யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்த பங்களாதேஷ் புனர்வாழ்வு நிறுவனத்தின் பணிப்பாளர் யாழ். அரச அதிபர் கே. கணேசைச் சந்தித்துத் தம்மால் யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் குறித்து ஆராய்ந்துள்ளார். (33)

## வீதியைப்புனரமைத்துத்தருமாறு கோயிலாமனை மக்கள் கோரிக்கை

(தென்மராட்சி)

படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுபட்ட கோயிலாமனை பிரதேசத்தின் பிரதான வீதிகளை புனரமைத்து தர இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோயிலாமனை கிராம மக்கள் பல இடம்பெயர்வுகளுக்கு பின்னால் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட போதும் கடந்த காலங்களில் இக்கிராமத்தில் பாரிய இராணுவ எறிகணைத்தளம் இருந்ததால் இப்பகுதிக்கு அதிகூடிய பாரவூர்திகள் கொள்கலன்கள் ஏற்றிய பாரவூர்திகள் அடிக்கடி வந்து சென்றதால் இப்பகுதிகளின் சாலைகள் அனைத்தும் நில மட்டத்திற்கு கீழ் இறங்கி இருப்பதுடன் குன்றும், குழியுமாகச் சேதமடைந்துள்ளது.

இவ் இராணுவ எறிகணைத்தளம் பலமாதங்களுக்கு முன் அகற்றப்பட்டு இக்கிராமத்தில் எந்தவித அபிவிருத்தி வேலைகளும் செய்யப்படவில்லை என்றும் கட்டை பறிச்சான் மயானத்திற்குச் செல்லும் வீதி இறுதிக்கிரியைக்கு கூட உடல்களைக் கொண்டு செல்லமுடியாதளவிற்கு வீதி சேதமடைந்திருப்பதாகவும் எனவே கண்டி வீதியில் இருந்து கட்டை பறிச்சான் மயானத்திற்குச் செல்லும் வீதியும் அதிலிருந்து பிரிந்து கோயிலாமனைக் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியையும் புனரமைத்துத் தரும்படி சாவகச்சேரி பிரதேசசபை, தென்மராட்சி பிரதேச செயலர், யாழ். அரசாங்க அதிபர், திட்டப்பணிப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை இக்கிராம மக்கள் கேட்டுள்ளனர். (28)

## தென்மராட்சி மாதர் சங்கங்கள் அ.அதிபருக்கு உ.உணவு நிவாரண வெட்டை ஆட்சேபித்து மகஜர்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் நிவாரண வெட்டை ஆட்சேபித்து மாதர்சங்கங்கள் உதவி அரசாங்க அதிபருக்கு அவசர மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீள் குடியமர்ந்த மக்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட ரூபா இருபத்தையாயிரம் கொடுப்பனவு கிடைக்கப் பெற்று பதினைந்து மாதங்கள் முடிவடைந்த குடும்பங்களுக்கு நிறுத்தப்பட்டுள்ள நிவாரண உணவு முத்திரைகள் தொடர்ந்தும் இம்மக்களுக்கு வழங்கக்கோரி தென்மராட்சி உதவி அரசாங்க அதிபருக்கு சாவகச்சேரி வடக்கு, சங்கத்தானை மாதர்சங் கங்கள் அவசர மகஜர்களைக் கொடுத் துள்ளன.

போரினாலும், தொடர்ந்து ஏற்பட்ட இடப்பெயர்வினாலும் மிகவும் பின்தங்கியுள்ள மக்கள் வாழும் இப்பிரதேசத்தில் அரசின் இத்தகைய நடவடிக்கைகள் மக்களை மிகவும் வறுமையான சூழலில் தள்ளியுள்ளதாகவும் ஏற்கனவே உயர் பாதுகாப்பு வலயத்தினாலும், இராணுவ ஆக்கிரமிப்பினாலும் தங்களது சொந்த நிலங்களையும், விவசாய நிலங்களையும் இழந்து ஜீவாதார சிக்கலில் வாழும் மக்களுக்கு இந்த நிவாரண வெட்டு ஒரு சவாலைத் தோற்றுவிப்பதாகவும், வறுமையை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

யாழ்.குடாநாட்டில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதால் கட்டாக்காலி நாய்க்கடிக்கு இலக்காவோரின் தொகையும் அதிகரித்திருக்கிறது. குறிப்பாக கடந்த ஒரு வருட காலத்துள் கட்டாக்காலி நாய்க்கடிக்கு இலக்காகி 18 பேர் யாழ். குடாநாட்டில் பலியாகியிருப்பதுடன் 300இற்கும் மேற்பட்டோர் நாய்க்கடிக்கு இலக்காகி வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்றிருப்பதாக சுகாதார திணைக்களகப்புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த விரிவான நடவடிக்கைகள் எதுவும் இடம் பெறவில்லை என துறைசார் அதிகாரிகளால் விசனம் தெரிவிக்கப்படுகிறது (33)

# ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

கடற்படைப் போராளிகளுக்கு கடற்பேரலைகளால் உயிரிழப்பு ஏற்பட்டது மிகவும் குறைவு. எங்களின் உயிரிழப்புக்கள் பற்றி நாங்கள் உடனடியாகவே வெளியிட்டிருந்தோம். மாமுனை முதல் நாயாறு வரையான கடற்கரை ஓரத்தில் தான் எங்களது கடற்படை முகாம்களும் இருந்தன. முகாம்களினுள் கடல் புகுந்து கொண்டது. ஆனால் அதனுள் இருந்த போராளிகள் எவரையும் கடல் கொண்டுபோய்விடவில்லை.

இவ்வாறு எங்கள் போராளிகள் உயிர்தப்பிக் கொள்வதற்கான அடித்தளத்தை தலைவர் தான் போட்டிருந்தார். அதாவது எங்களின் போராளிகளுக்குரிய பயிற்சி ஒழுங்கமைப்பில் ஆண் போராளிகள் ஐந்து கடல்மைல் நீச்சலும், பெண் போராளிகள் மூன்று கடல்மைல் நீச்சலும் திறமையாக நீந்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை இணைத்திருந்தா.

முல்லைத்தீவுக்குள் போனபோது சிதைவடைந்திருந்த அதன் தோற்றமும், மனித உடல்கள் மூச்சிழந்து போய்க் கிடந்த நிலையும் முகங்கள் விறைத்தபடி எதையோ தேடிக் கொண்டிருந்த மக்களையும் பார்க்கின்ற பொழுது ஒரு திறந்த வெளி மரண வீடாக முல்லைத்தீவு காட்சி தந்தது. இப்படித்தான் எனது பார்வை இருந்தது.

ஒரு பெரும் நகரம். அந்த நகரத்தில் இருந்த பெருமளவான மக்கள் எல்லோரையுமே அமைதியாக இருந்த கடல் திடீரென எழுந்து அடித்துக் கொண்டுபோய்விட்ட நிலையில் அனைத்து நடவடிக்கைகளையும் செய்ய வேண்டிய பாரிய பெருமளவான விறகுகளை அடுக்கி சவக்காலையில் வைத்துத்தான் எரிப்பார்கள். ஆனால் சுனாமிக்களத்தில் இறந்துபோன மக்களின் உடல்களை ஒவ்வொன்றாய் எடுத்துச் சேர்த்து ஒன்றரை லீற்றர் மண்ணெண்ணையுடனும்-ஒரு கிலோ சீனியுடனும்- சிறியளவு விறகுடனும் எரியூட்டி தகனம் செய்திருக்கிறார்கள் எங்களின் பெண் போராளிகள். இந்த நிகழ்வு எங்களின் சமூகத்தில் ஒரு பெரும் திருப்பமான மறக்க முடியாத பணி. உண்மையில் பெண் போராளிகளின் பணி மிக முக்கியமானது.

நிலை என்ன என்பதை அறிந்து கொள்வதற்காக அன்று மதியம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்குப் போனேன்.

பாடசாலையில் மக்கள் கதறி அழுதுகொண்டும், ஏக்கத்துடனும் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் பார்க்கின்ற பொழுது வேதனையாக இருந்தது. அவற்றை எல்லாம் தாண்டி பாடசாலை மண்டபங்களுக்குள் போனேன. அந்தப் பெரும் மண்டபங்களுக்குள் இரண்டு மூன்று வரிசைகளாக உடல்கள் அடுக்கப்பட்டிருந்தன.

சிறுவர்கள், குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என அனைவரது உடல்களும் ஒன்றாக அடுக்கப்பட்டிருந்தன. அப்படி இருந்த உடல்களில் சிலவற்றைத் தூக்கியபடி சிலர் கதறி அழுது கொண்டிருந்தனர். ஏனைய உடல்களுக்குள் தங்கள் உறவுகளின் உடல்களும் இருக்கின்றதா? எனப் பலர் தேடிக்கொண்டிருந்தார்கள். பாடசாலைச் சூழலில் நடந்து கொண்டிருந்த ஒவ்வொரு சம்பவங்களும், காட்சிகளும் மனதின் ஆழத்தைத் தொட்டு உலுப்பியது



**சுனாமிப்பேரலைகளில் சிக்கி உயிரிழந்தவர்களில் பெருந்தொகையானவர்கள் பெண்கள். இவர்களைப் பொறுத்தமட்டில் நீச்சல் அனுபவம் அறவே இல்லாதவர்கள். அதனால் தான் இப்படியான பெரும் இழப்பை பெண்கள் சந்தித்திருக்கிறார்கள். இந்த உயிரிழப்புத்தொகை எங்கள் சமூகத்துக்கு ஒரு புதிய செய்தியை தந்திருக்கிறது. பெண்கள் கடலுக்குள் இறங்கக்கூடாது என்கிற பிற்போக்குத்தனமான சமூகக்கட்டமைப்பு உடைத்தெறியப்பட்டு அனைவருக்கும் நீச்சல் பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்ற தேவையை உணர்த்தி இருக்கிறது. தமிழீழக் கடற்படைத்தளங்களுக்குள் கடல்புகுந்தாலும் போராளிகளுக்கு உயிரிழப்பு ஏற்படவில்லை. இவ்வாறு இழப்பு ஏற்படாதிருந்ததற்கு தலைவர் அமைத்திருந்த கடற்பயிற்சிமுறைதான் காரணமாக இருந்தது. பேரிழப்பில் சிக்கிப்போயிருந்த முல்லைத்தீவில் நடைபெற்ற மீட்பு நடவடிக்கையில் பெண் போராளிகளின் பங்கு முக்கியமானது. சுனாமிக்களத்தில் பெண்களும் மீட்பு நடவடிக்கையில் பங்குகொண்டது என்பது எங்களது தாயகத்தில் தான் நடந்திருக்கிறதென சுனாமி மீட்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி மேற்கொண்ட தமிழீழ கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் தனது அன்றைய அனுபவங்களை பகிர்த்திருந்தார்.**



# சுனாமி உயிரிழப்புக்கள் எமக்கு அளித்த செய்தி பெண்களுக்கும் நீச்சல் பயிற்சி தேவை என்பதே

தலைவரின் இந்த அறிவுறுத்தலிற்கமைவாக செயற்பட்டதால்தான் போராளிகளின் உயிரிழப்பைத் தவிர்க்க முடிந்தது. அதனால் போராளிகள் உடனடியாகத் தங்களின் முகாம் பகுதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட்டு மக்களை, அவர்களின் உடமைகளை மீட்கின்ற நடவடிக்கைகளுக்காக வந்திருந்தனர்.



பெண்கள் அதிகளவில் உயிரிழப்பதற்கு நீச்சல் அனுபவம் இல்லாதது தான் காரணமாக அமைந்துவிட்டது. இந்த உயிரிழப்புக்கள் எங்களுக்கும், சமூகத்திற்கும் ஒரு புதிய செய்தியை சொல்லிவிட்டுப் போய் இருக்கிறது.

பெண்கள் கடலுக்குள் இறங்கக் கூடாது என்கின்ற பிற்போக்குத்தனமான சமூகக்கட்டமைப்பு உடைத்தெறியப்பட்டு அனைவருக்கும் நீச்சல் பயிற்சி வழங்கவேண்டும் என்ற தேவையை உணர்த்தியிருக்கிறது.

முல்லை நகரம் ஒட்டுமொத்தமாக உருமாறிப் போய் இருந்தது. எங்கும் இடிபாடுகளும்,

**பகுதி 54**

கஞ்சல்களும், குப்பைகளுமாகக் காட்சிதந்தது. இது உண்மையில் முல்லைத்தீவுதானா? என்று சிந்திக்கவைக்கும் அளவுக்கு நிலைமை இருந்தது. கலகலப்பாக இருந்த நகரம் துயரத்தின் வலியால் துடித்துக்கொண்டிருந்தது. எதைப் பார்த்தாலும் பயங்கரமாய் இருந்தது. மனித உடல்கள் அங்கும், இங்குமாகவும் அதற்குள்ளும், இதற்குள்ளுமாகவும் இருந்தன. முரட்டுத்தனமாக எழுந்தடித்த கடலுடன் போராடி பறிகொடுத்த தங்கள் உறவுகளைச் சிலர் கண்ணீருடன் தேடி அலைந்து கொண்டிருந்தனர்.

பொறுப்பு எங்கள் இயக்கத்திடம் இருந்தது.

அதற்கமைவாக அனைத்துப் படையணிகளும் மீட்பு நடவடிக்கைகளில் வேகமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தன. இதில் பங்கெடுத்த அனைவரும் துரிதமாகவும் ஓய்வின்றியும் செயற்பட்டனர். அவர்களின் துரிதமான செயற் பாடுதான் மீட்பு நடவடிக்கையை நாங்கள் விரைவாக நிறைவு செய்ய காரணமாக இருந்தது.

உண்மையில் இந்த மீட்பு நடவடிக்கையில் பெண் போராளிகளின் பங்கு மிக முக்கியமானது. இராணுவச் சீருடையுடன் நெஞ்சளவு தண்ணீர் நிறைந்திருந்த பகுதிகளுக்குள் எல்லாம் போய் மீட்பு நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருந்தனர். காலை எட்டுமணியளவில் நடவடிக்கைக்காகச் சென்றால் மாலை ஆறு மணியளவில்தான் நிறைவடையும், அதுவரை தண்ணீருக்குள் நனைந்தபடி உடல்களை மீட்டுக் கொண்டிருந்தார்கள்.

சுனாமிக் களத்தில் பெண்கள் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டது என்பது எங்களது தாயகத்தில் தான் நடந்திருக்கிறது. இதுமட்டுமல்ல எங்கள் சமூகத்தில் உயிரிழந்தவர்களின் உடலை தகனம் செய்வதென்றால் குறிப்பிட்ட வயதைத் தாண்டிய ஆண்கள்தான் ஈடுபடுவார்கள் பாராட்டப்பட வேண்டியது.

உண்மையில் முல்லைத்தீவை நாங்கள் ஓயாத அலைகள்-01 நடவடிக்கை மூலம் கைப்பற்றியபொழுது பெருமளவான சிறிலங்காப் படையினர் உயிரிழந்திருந்தனர். முல்லை நகரம் மூன்று நான்கு மாதங்கள் வரை மணம் மாறவேயில்லை. ஆனால் இந்தப் பேரிழப்பில் அழிந்துபோயிருந்த அதே நகரத்தை பத்துப் பதினைந்து நாட்களில் ஒரு மணமும் இல்லாதவாறு விடுவித்துவிட்டோம்.

நாங்கள் விரைவாக மீட்பு நடவடிக்கைகளை செய்து முடிப்பதற்கு யுத்த களங்களில் சந்தித்த, கற்றுக் கொண்ட அனுபவங்கள் ஒரு காரணமாக இருந்தது.

**முல்லைத்தீவைப் பொறுத்தமட்டில் அனைவரது முகங்களும் எனக்குப் பரீட்சயமான முகங்களாக இருந்தன. ஆனால் சுனாமி அலைகளுக்குள் சிக்கி அலங்கோலமான நிலையில் உடல்கள் இருந்த பொழுது எது எவருடைய உடல் என்பதை எனனால் இனங்கண்டு கொள்ள முடியவில்லை. அந்தளவுக்கு உடல்கள் உருமாறிப் போயிருந்தன.**

இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டு இந்தப் பேரழிவில் இருந்து தப்பியவர்களின் இந்த நிலையில் அடுத்த கட்டமாக என்ன செய்வது? உடல்களை எப்படி அடக்கம் செய்வது? மக்களின் விருப்பம் என்ன? என்பனவற்றை அறிவதற்காக மக்களுடன் கதைப்போம் என்று நினைத்து வழமையாக எல்லா வேலைகளையும் ஒழுங்குபடுத்திச் செய்கிறவர்கள் யாராவது இருக்கிறார்களா? என்று பார்த்தேன் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரைத் தவிர வேறு ஒருவரையும் காணவில்லை. அவர்கள் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்து போய்

**அ.லோகீசன்**

விட்டார்கள்.

அதன் பிறகு அங்கிருந்தவர்களுடன் கதைத்து ஒரு குழியில் அடக்கம் செய்வது என்று முடிவெடுத்தோம்.இந்த வேலைகளை அரசியல் துறையின் ஒழுங்கமைப்பில் பாராளுமன்ற உறுப்பினர் கனகண்ணா உட்பட எல் லாரும் சேர்ந்து அந்த ஒழுங்குகளைச் செய் யிறம் எண்டு பொறுப்பெடுத்தார்கள்.

அதன் பின்னர் என்ன நடந்தது அடுத்த கட்டமாக என்ன செய்தோம் என தமிழீழ கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் பகிர்ந்ததன் தொடர் அடுத்த பகுதியிலும். தொடரும்...



**07.**

✥நேபாளத்தில் ருகும் மாவட்டத்தில் உள்ள இராணுவமுகாம் மீது மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தாக்குதல். இதில் 97 தீவிரவாதிகள் பலியானதாக அரசதரப்பு அறிவிப்பு.

✥கொலம்பியாவின் எண்ணெய் வளம்மிக்க அராவுகா மாநிலத்தில் படையினர் மீது மார்க்சிய கிளர்ச்சிவாதிகள் மறைந்திருந்து நடத்திய திடீர் தாக்குதலில் 17 கொலம்பியப் படையினர் பலி.

✥இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்முகாஷ்மீரில் இருந்து முஸாபராத் நகருக்கு பேருந்து போக்குவரத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது. 57 ஆண்டுகளின் பின்னர் இரு பகுதிகளுக்கும் இடையே இச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.



**08.**

✥இஸ்ரேல் அதிபர் மேஷேகத்சாவும், சிரிய அதிபர் பஷர் அல்-அசாத்தும் சந்தித்துப் பேசினர். போப்பாண்டவரின் இறுதிச் சடங்கிலே இச் சந்திப்பு இடம்பெற்றது.

✥பலகோடி ரூபா போலி முத்திரைகள் மோசடி செய்தது தொடர்பாக பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் மூன்று பேருக்கு ஏழு ஆண்டு சிறைத்தண்டனை விதித்தது.

✥உலகக் கத்தோலிக்கர்களுக்கு கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தலைமை தாங்கி நித்திய இளைப்பாற்றை அடைந்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர். பல இலட்சக் கணக்கானோர் கண்ணீர் சொரிய உலகிலிருந்து விடைபெற்றார்.



✥அல்ஜீரியாவில் லார்பா எனும் நகரில் ஆயுததாரிகள் சிலர் வீதிகளில் பயணித்த வாகனங்களை இடைநிறுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 14 பொதுமக்கள் பலியாகினர்.



✥இந்தோனேஷியாவின் வடமாகாணமான சுலாவெசியின் தலைநகரில் சக்திவாய்ந்த நில அதிர்வொன்று ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.5 புள்ளியாகப் பதிவாகியிருந்தது.

**09.**

✥அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்து இரண்டு ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஈராக் தலைநகர் பாக்தாத் பிர்தோஸ் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் இடமபெற்றது. இதன்போது அமெரிக்க இராணுவம் ஈராக்கிலிருந்து வெள்யேற வேண்டும், சதாமின் விசாரணை துரிதப்படுத்தவேண்டும் என போது கோரப்பட்டது.



✥சீனத் தலைநகர் பீஜிங் மற்றும் புறநகர்ப் பகுதியில் எலக்ரோனிக் பொருட்கள் விற்கும் கடைகளில் பொருட்களை வாங்கவேண்டாம் என ஆயிரக்கணக்கான மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




✥பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ்-கமீலா திருமணம் மேற்கு லண்டனில் சிறப்புற நடைபெற்றது.







**07.04.2005 - 13.04.2005**

✥ஸாம்பியாவின் வடபகுதியில் உழவு இயந்திரம் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. அதில் பயணித்தவர்களில் 42 பேர் பரிதாபகரமாகப் பலியாகினர். 50 பேர் காயமடைந்தனர்.

**10.**

✥பங்களாதேஷின் தலைநகர் டாக்கா அருகே பலஸ்பரி என்ற இடத்தில் உள்ள ஆடைதொழிற்சாலையின் ஒன்பது மாடிக்கட்டடம் திடீரென்று இடிந்து விழுந்ததில் 73 பேர் பலியாகினர். மேலும் பலர்காயம். இத்தொழிற்சாலையில் 500 தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




✥பாகிஸ்தான் தூதரக அதிகாரி மாலிக்முகமது ஜாவ்து தீவிரவாதிகளினால் கடத்தல்.



✥முன்னாள் ரஷ்ய உளவு அமைப்பின் தலைவர் அனடோலி டிரோபிமோவ் மொஸ்கோ நகரிலுள்ள அவரது குடியிருப்பு அருகே மர்மநபர்களால் சுட்டுக்கொலை. இதன்போது அவரது மனைவி டாடியானா படுகாயமடைந்தார்.

✥இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் அமெரிக்காவின் டெக்சாஸ்மாநிலத்திற்குச் சென்று சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஐச் சந்தித்துப் பேசியுள்ளார்.

✥இந்தோனேஷியாவின் சுமாத்திராத்தீவில் நிலஅதிர்வு ஏற்பட்டதில் மக்கள் அச்சத்தின் காரணமாக வெளியேறினர்.



✥பலஸ்தீன இளைஞர் மூவரை இஸ்ரேலிய இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்திற்கும் இடையில் போர்நிறுத்த இணக்கப்பாடு ஏற்பட்டு அது நடைமுறையில் இருந்தபோதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

**11.**


✥சிரியாவின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவத் தளம் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலின் போது இரண்டு படையினர் காயம்.

✥ஜப்பானில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 6.1 புள்ளியாகப் பதிவாகி யுள்ளது.

✥ஜெயலலிதா அரசின் கடும் போக்கைக் கண்டித்து திருச்சியில் அரச ஊழியர்கள் 15 அம்சக்கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




✥சீனப்பிரதமர் வென்ஜியாபோ புது டில்லிக்கு விஜயம் செய்து இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்துப் பேசினார்.



✥ஈராக்கின் கிழக்கில் உள்ள அல்குலைம் எனும் இடத்தில் இராணுவ முகாமொன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் பலர் காயம்.



✥பங்களாதேஷின் வடரங்பூர் மாவட்டத்தில் கடும் புயல் வீசியதன் காரணமாக 4பேர் பலி; 18 பேர் காயம். ஐந்நூறுக்கும் மேற்பட்ட வீடுகள், பள்ளிவாசல்கள்; பாடசாலைகள் என்பன தரைமட்டமாகின.



✥ஈராக்கில் கட்டட ஒப்பந்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த அமெரிக்கர் ஒருவர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுட்டார்.

✥ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவை ஆதரிக்கும் முன்னாள் இராணுவத் தளபதி கியால்பாளைக் கொல்ல முயன்ற 12 தீவிரவாதிகள் குண்டுத்தாக்குதலில் பலி.



**12.**

✥இந்தோனேஷியாவின் சுமாத்திராத் தீவிற்கு அருகே பதாங் என்ற இடத்திலுள்ள தலாங்மலையில் எரிமலை வெடித்து சாம்பல் கக்கிக்கொண்டிருந்ததால் மக்கள் வீடுகளை விட்டுப் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

**13.**

✥அமெரிக்கப் பாதுகாப்புஅமைச்சர் டொனால் ரம்ஸ்பீல்ட் ஆப்கானின் தென்பகுதி நகரான கந்தகாருக்கு விஜயம் செய்து ஆப்கான் சனாதிபதி ஹமீட்ஹர்சாயை சந்தித்துப் பேசியுள்ளார்.

✥சொறன்ரோவின் ஸ்காபரோப் பகுதியில் உள்ள ஒரு தொடர்மாடிக் கட்டடத்தில் குடியிருந்த வெள்ளையரான வூல்ப் காங்ட் ரூஜ் இனந்தெரியாத நபரால் சுட்டுக்கொலை. இந்த நபர் கூகிளக்ஸ்கிளான் எனும் அமெரிக்க அதிதீவிரவெள்ளை இனத்து வேசக் கும்பலுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார்.

# அரச சார்பற்ற நிறுவனங்களை விமர்சிக்க ஜே.வி.பிக்கு அருகதை கிடையாது

## - ஐ.தே.கட்சி கடும் கண்டனம்

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்களை விமர்சிப்பதற்கு ஜே.வி.பி யினருக்கோ அவர்களுடன் இணைந்த ஏனைய அமைப்புகளுக்கோ எந்தவித அருகதையும் இல்லையென ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹபீர்காசீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்; சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்போது தமது கட்சியின் பெயரைப் பரப்பும் வகையில் பட்டிகளைஒட்டிக் கொண்டு ஜே.வி.பி யின் பகிர்ந்தளித்த பொருட்கள் அனைத்தும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப் பட்டவையே. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரச சார்பற்ற நிறுவனங்களே முன் னின்றன என்பது அவர்கள் அனை வருக்கும் தெரியும். அன்று அவர் களின் உதவிகளைப் பெற்றவர்கள் இன்று அவர்களை விமர்சிக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (32)

## கடத்தல்

திருகோணமலை உப்புவெளிப் பிரதேசத்தில் கடந்தவெள்ளியிரவு ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இவர் முன்னர் இராணுவ வாகனச் சாரதியாக பணியாற்றியவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடத்தலில் ஈடுபட்டோர் குறித்துத் தகவல் இல்லை.

# தற்காலிக மேலதிக மாவட்ட பதிவாளர்களை பதிவாளர் சேவை தரம்-3 இல் சேர்க்க முடிவு

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு உட்பட நாடு பூராகவும் உள்ள பிரதேச செயலகங்களிலும், மாவட்ட காணிப்பதிவகங்களிலும், தற்காலிகமாக கடமையாற்றும் மேலதிக மாவட்ட பதிவாளர்களை பதிவாளர் சேவையின் தரம்-3 இல் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை பதிவாளர் நாயக திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை பிரதேச செயலகங்களில் கடமையாற்றுவோரிடமிருந்து வெளிவாரியாகப் பெற்றுக்கொள்ளப்படுமென பதிவாளர் நாயகம் எல்.கே ரட்ணசிறி கூறியுள்ளார். இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 25 ஆம் திகதிவரை பதிவாளர் நாயக திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கமுடியும்.

பதிவாளர் சேவையின் 3 ஆம் தரத்தில் நாடு பூராகவும் காணப்படும் வெற்றிடங்களில் 85 வீதமானவை உள்வாரியாகவும், மீதி வெளிவாரியாகவும் நிரப்பப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# மழைநீர் உட்புகும் கிணறுகளைத் தொற்று நீக்கிப் பயன்படுத்த அறிவுறுத்து

(மல்லாவி)

பாண்டியன்குளம் துணுக்காய்ப் பிரதேசங்களில் அண்மையில் பெய்து வரும் பருவ மழையினால் மழைநீர் நில மட்டத்தில் உள்ள திறந்த கிணறுகளில் உட்புகுவதால் கிணற்று நீரில் கிருமிகளின் தாக்கம் அதிகம் காணப்படுகின்றன. இதன்போது பலநோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என தமிழீழ சுகாதார சேவையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலரா, நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம் (சீதபெதி), ஈரல்அழற்சி போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. இதனால் திறந்த கிணற்றின் நீரை உணவுத் தேவைக்குப் பயன்படுத்தும்போது குளோரின் இடப்பட்ட நீர்,சுத்தமான நீர், கொதித்தாறிய நீரைப் பாவிப்பதால் நோய்களில் இருந்து பாதுகாத்துக்கொள்ளலாம்.

அநேகமான தொற்று நோய்க் கிருமிகள் நீர்மூலமே பரவுகின்றன. இதனால் நீர்நிலைகளில் கிருமிகள் உட்செல்லாதபடி பாதுகாப்பதன் மூலம் நோய்கள் வராமல் தவிர்க்கலாம். சுத்தமான நீரை மட்டுமே பருக வேண்டும் என தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவிக்கின்றனர். (24)


## கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம் (வ-து) முல்லைத்தீவு

# பதவி வெற்றிடம்

**பதவி:- பொதுமுகாமையாளர் 101/08**

*சம்பள அளவுத்திட்டம்:*–5250-120 x10-130x10-7750

*இத்துடன் ரூபா –1250/= அடிப்படைச்சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும்*

தகைமை:- அ) கூட்டுறவுப்பணியாளருக்கான 9ஆவது சம்பளத்திட்டத்தில் மூன்று வருட முகாமைத்துவம் /மேற்பார்வைத்தர அனுபவம் அல்லது 10ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமைத்துவம்/ மேற்பார்வைத்தரத்தில் ஆறுவருட (06) அனுபவம்.

அல்லது

ஆ) ஒரு பல்கலைக்கழக பட்டம் அல்லது சமமான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் /வர்த்தக நிறுவனம் ஒன்றில் நான்கு வருடத்திற்குக் குறையாத முகாமைத்துவத் தர அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தர சான்றிதழ் /க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி அத்துடன் ஒரு அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/வர்த்தக நிறுவனத்தில் ஆறு ஆண்டுகளுக்குக் கு  பாத முகாமைத்துவ தரப் பதவியில் அனுபவம்.

நிபந்தனை:- 01) வயது 23-45 வரை. கூட்டுறவுப் பணியாளருக்கு வய  லை கணிக்கப்படமாட்டாது. சேவையிலுள்ள கூட்டுறவுப்பணியாளர்கள் தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கப்படவேண்டும்.

02) ரொக்கப்பிணையாக ரூபா 20000/= செலுத்துவதுடன், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு ஏற்பாடுகளுக்கு அமைய உறுதிப்பிணையும் செலுத்துதல் வேண்டும்

03) முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 30.04.2005 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக தலைவர், கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம், முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்பட வேண்டும் .

தலைவர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம்,
முல்லைத்தீவு.

(சி 1777)


-வடக்கு - கிழக்கு மாகாண-

# உள்ளூராட்சி மன்றத்தேர்தலை மீண்டும் ஒத்திவைக்க முடிவு

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் ஒத்திவைக்க சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளியாகுமெனத் தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பிரதிநிதிகளை நியமிக்க 2002 ஆம் ஆண்டு வேட்பு மனுக்கள் கோரப்பட்டன. எனினும் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான நிலவரம் இன்மையினால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

# மின்சாரசபைதனியார் மயமாக்கல் பாராளுமன்றமே தீர்மானிக்கும்

## -சிறிலங்கா அரசு முடிவு-

சிறிலங்கா மின்சார சபையை தனியார்மயப்படுத்துவது தொடர்பான விடயத்தைத்தீர்மானிக்கும் அதிகாரத்தை பாராளுமன்றத்திடம் கையளிப்பதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக திறைசேரி செயலாளர் பி.பீ. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான ஆவணங்கள் ஏற்கனவே அமைச்சரவையிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இவற்றின் மூலம் சிறிலங்கா மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கான கட்டமைப்பொன்றும் முன்வைக்கப்பட்டிருப்பதாக திறைசேரி செயலாளர் குறிப்பிட்டார். இந்த விடயம் குறித்து அமைச்சர்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். சிறிலங்கா மின்சார சபை தனியார் மயப்படுத்தப்படுமாயின் அதற்கு இப்போது அமுலில் இருக்கும் 1983ஆம் ஆண்டின் அரச சொத்துக்களை தனியார் மயப்படுத்தல் சட்டத்தின் கீழ் இந்த யோசனையைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் ஆனால் மறுசீரமைப்பிற்கு அந்த சட்டத்தின் கீழ் யோசனையைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவை ஏற்படாது எனவும் அவர் கூறினார். சபையைத் தனியார்மயப்படுத்த அமைச்சரவை தீர்மானம் எடுத்தாலும், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் அது நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் திறைசேரிச் செயலாளர் மேலும் கூறினார்.

-மேல்மாகாணசபை உறுப்பினர்-

# கொலைச் சந்தேக நபர் உயர்நீதிமன்றில் சரண்

(கொழும்பு)

மேல்மாகாணசபை உறுப்பினர் நாமல்குணவர்த்தன கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தேடப்பட்டுவந்த பிரதான சந்தேக நபர் கொழும்பு கோட்டை உயர்நீதிமன்ற நீதவான் முன்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சரணடைந்துள்ளார். சட்டத்தரணி ஒருவர் ஊடாக இவர் சரணடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேக நபரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உயர்நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார். நாமல்குணவர்த்தன கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் கொள்ளுப்பிட்டியில் இனம்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம், கிளிநொச்சி.

# கூலித்தொழிலாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பொருட்கள் ஏற்றி இறக்குவதற்கு கூலியாட்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புவோர் கடமை நேரத்தில் சங்க அலுவலகத்தில் விண்ணப்பத்தினைப்பெற்று 30.04.2005ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,
கிளிநொச்சி.

(சி11640)


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## கிஸ்ணபிள்ளை - கோணாமலை

## [நல்லலிங்கம்]

**தோற்றம் 27 - 03 - 1953**

**மறைவு 29 - 04 - 2004**

18-04-2005 இன்று திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள் நண்பர்கள்,போராளிகள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:–
மு. வேணி,
50 வீட்டுத்திட்டம்
கைவேலி.

(5831)

உன்பிரிவால்வாடும்
மனைவி, பிள்ளைகள்
மருமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

# முஷாரப்பிற்கு மன்மோகன்சிங் விருந்து கொடுத்தார் இருவரும் ஒன்றாக அமர்ந்து கிரிக்கெட் பார்த்தனர்

நேற்று முன்தினம் பிற்பகல் இந்தியா வந்த பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பிற்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் விருந்து கொடுத்துக் கௌரவித்தார் இவ்விருந்தில் இரு தலைவர்களும் காஷ்மீர் பிரச்சினை பற்றி விவாதித்ததாக தெரிகிறது.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணிக்கு அதிபர் முஷாரப்புக்கும், அவரது குழுவினருக்கும் பிரதமர் மன்மோகன்சிங் விருந்து கொடுத்தார்.



நேற்று முன்தினம் புதுடில்லி வந்த பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் தனது மனைவியுடன் விமானத்திலிருந்து இறங்குவதை முதலாவது படத்திலும், அவர் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் புதுடில்லியில் நேற்று நடைபெற்ற பாக் –இந்திய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியை பார்வையிடச்சென்றபோது ரசிகர்களை நோக்கி கையசைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

இந்தியாவிற்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அதிபர் முஷாரப் நேற்றுமுன்தினம் பிற்பகலில் மனைவி சகபா மற்றும் மந்திரிகள்- அதிகாரிகள் குழுவுடன் தனி விமானத்தில் ஜெய்ப்பூர் வந்தார். விமான நிலையத்தில் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. ராஜஸ்தான் முதலமைச்சர் வசுந்தரா ராஜே, ஜெய்ப்பூர் மேயர் அசோக் பர்னாமி ஆகியோர் வரவேற்றனர்.

வெள்ளை நிறகுர்தா, பைஜாமா அணிந்திருந்த முஷாரப் வரவேற்பைப் பெற்றுக் கொண்டு நான் இங்கு வந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். என்றார். பிறகு முஷாரப்- மனைவி மற்றும் மந்திரிகள், ஜஜ்மீர் தர்காசென்று தொழுகை நடத்தினர். 30 நிமிடம் தொழுகையை முடித்துக்கொண்டு வெளியேவந்த முஷாரப் எனது நீண்ட நாள் ஆசை நிறைவேறிவிட்டது. இங்கு தர்கா பகுதியில் நிற்பது பெருமையாக இருக்கிறது என்றார்.

இந்தியா-பாகிஸ்தானில் அமைதியும், முன்னேற்றமும் ஏற்பட வேண்டும் என்று பிரார்த்தனை செய்தேன். அதற்கு நல்ல பலன் கிடைக்கும்" என்றும் முஷாரப் கூறினார்.

அங்கு இருந்து ஜெய்ப்பூர் திரும்பிய முஷாரப் மற்றும் குழுவினர் அங்கு இருந்து தனி விமானத்தில் டில்லி போனார்கள்.விமான நிலைய வரவேற்பு முடிந்ததும் முஷாரப் மற்றும் குழுவினர் டில்லி மான் சிங் விடுதியில் தங்கினர்.

அப்போது அவர்கள் இரு நாட்டு உறவு குறித்து பூர்வாங்கப்பேச்சு நடத்தினர். அதில் காஷ்மீர் பிரச்சினையும் இடம்பெற்றது.நேற்றுக் காலை ஒன்பது மணிக்கு டில்லி பெரோசா கோட்லா மைதானத்தில் இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் இடையே ஒருநாள் போட்டி நடந்தது. அதை பிரதமர் மன்மோகன்சிங், அதிபர் முஷாராப் ஆகியோர் அருகருகே அமர்ந்து பார்வையிட்டனர். இதனால் அப்பகுதியெங்கும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

# பீகார் லோக் ஜனசக்தி இரண்டு துண்டானது?



பஸ்வான்


இந்திய பீகார் மாநிலத்தில் ஆட்சியமைப்பதற்கு எந்தவொரு கட்சிக்கும் ஆதரவு கொடுக்கப் போவதில்லையென அறிவித்து வந்த ராம் விலாஸ் பஸ்வானின் லோக் ஜனசக்தி கட்சி இரண்டாகப் பிளவுபட்டிருப்பதாக பீகார் தகவல்கள் தெரிவிக்கின்றன.

243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்டசபைக்குக் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் தேர்தல் நடைபெற்று எந்தவொரு கட்சியும் அறுதிப்பெரும்பான்மை எடுக்க முடியாமல் போகவே அங்கு சனாதிபதி ஆட்சி அமுலானது.

29 உறுப்பினர்களைக் கொண்ட லோக் ஜனசக்திக் கட்சி ஆதரவு வழங்கினால் எந்தக்கட்சியும் ஆட்சியமைக்கலாம் என்ற நிலையில் லோக் ஜனசக்தி கட்சியிடம் இரு பெரும் கட்சியும் ஆதரவு கோர முற்படவே தான் எந்தவொரு கட்சிக்கும் ஆதரவு வழங்கப்போவதில்லையென அறிவித்து வந்தது. பஸ்வானின் இக் கடும் போக்கால் அதிருப்தி அடைந்த சில கட்சி உறுப்பினர்கள் "ரப்ரிதேவி" ஆட்சியமைக்கத் தமது ஆதரவை வழங்க முன்வந்துள்ளனர். இதனால் லோக் ஜனசக்தி கட்சி இரண்டாகப் பிளவுபட்டிருக்கிறது.

# எனது அரசாங்கம் கல்வியைச் சீர்திருத்தவில்லை

## வாஜ்பாய் கவலை



கல்வியில் சீர்திருத்தம்செய்ய எனது அரசு தவறிவிட்டதென இந்திய முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார். பொதுநிகழ்வொன்றில் பேசிய வாஜ்பாய் அங்கு பேசுகையில்,

எனது தலைமையில் நடந்த தே.ஜ.கூட்டணி அரசு கல்வித்துறையில் சீர்திருத்தம் செய்யத் தவறிவிட்டது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். கல்வித்துறையில் சீர்திருத்தம தேவைப்படுகிறது. நாட்டில் கல்வி அமைப்பு எப்படி இருக்கவேண்டும். தொழில் கல்விக்கு என்ன பங்களிப்புக் கொடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க காலஅவகாசம் தேவைப்படுகிறது என்றார். இதுதவிர நிதி ஆதாரமும் அதற்கு பெரும் தடையாக இருக்கிறது என்றார்.

# இரு தொகுதிகளுக்கு இடைத்தேர்தல்

தமிழகத்தில் எதிர்வரும் மே மாதம் இடம்பெறவிருக்கும் இரு தொகுதிகளிற்கான இடைத் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல்கட்சிகளுக்கான சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

தமிழ் நாட்டில் கும்மிடிபூண்டி, காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்கு வரும் மே மாதம் 14ஆம் திகதி இடைத்தேர்தல் நடக்க இருக்கிறது இந்நிலையில் தேர்தல் ஆணையகம் நேற்றுமுன்தினம் இது தொடர்பாக ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் அது கூறியிருப்பதாவது: தேர்தல் சின்ன உத்தரவின் பத்தாவது விதியின்படி மற்றொரு மாநிலத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சி தமிழ்நாட்டின் கும்மிடிபூண்டி, காஞ்சிபுரம் இடைத்தேர்தல்களில் போட்டியிட விரும்பினால் தேர்தல் சின்னத் துக்காகத் தேர்தல் ஆணையகத்தை அணுகலாம் எனத் தெரிவித்துள்ளது.

# தமிழை ஆட்சி மொழியாக்கவேண்டும் தஞ்சை தி.மு.க மாநாட்டில் தீர்மானம்

தமிழை மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்க வேண்டும், தமிழ்நாட்டில் பள்ளி முதல் கல்லூரி வரை தமிழைப் பயிற்று மொழியாக்க வேண்டும் என்று தஞ்சை மண்டல தி.மு.க மாநாட்டில் தீமானம் நிறைவேற்றப்பட்டது.

சனிக்கிழமை தொடங்கிய இம் மாநாட்டின் முதல் நாளில் 30 பொதுத் தீர்மானங்களும் தஞ்சை டெல்டா மாவட்டங்களின் பிரச்சினைகள் தொடர்பாக 16 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இந்தி பேசாத மாநில மக்கள் உரிமை நிரந்தரமாகக் காப்பாற்றப்பட வேண்டுமெனில் அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஆட்சி மொழிகள் அனைத்தும் மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்கப்படுவதுதான் ஒரே வழி. 1996 திருச்சி மாநாட்டில் வலியுறுத்திய இக் கருத்தை மீண்டும் வலியுறுத்துகின்றோம் எனவும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தஞ்சை மண்டல திமு.க.மாநாட்டில் விழா மலரை தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட அவரிடம் இருந்து தி.மு.க. பொதுச்செயலாளர் பேராசிரியர் அன்பழகன் பெற்றுகொள்கிறார்.

மலரும் புத்தாண்டில் சாந்தி, சமாதானம்
பெற்று சுபீட்சமாக வாழ எமது வாழ்த்துக்கள்

பிறப்பிலேயே முன்னணி வகிக்கும்



டைடோ Daido



யமாட்டோ Yamato





Koyo®

0112-341580/1
0112-438779
Fax: 0112-454608

(சி– 11778)



# கடைசி ஒரு நாள் போட்டி இந்தியா பரிதாபத் தோல்வி

## தொடரைக் கைப்பற்றியது பாக்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் டில்லியில் நடைபெற்ற கடைசி ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 159 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இவ்வெற்றி மூலம் ஆறு போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை பாகிஸ்தான் அணி 4-2 என்ற நிலையில் கைப்பற்றியது.

நாணயச் சுழற்ச்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். இதன்படி பாகிஸ்தான் வீரர்கள் ஆரம்பம் முதல் அதிரடியாகவும், பொறுப்புடனும் ஆடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களைக்குவித்தனர். துடுப்பாட்டத்தில் அப்ரிடி 44,யுஹானா50, மாலிக்72, யுனிஸ்கான் 40, இன்சமாம் 68 ஓட்டங்களை அதிக பட்சமாகக் பெற்றனர்.

பந்துவீச்சில்நெஹ்றா, அகார்கர் தலா மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பின்னர் வெற்றி இலக்கை நோக்கி ஆட்டத்தை தொடக்கிய இந்தியா விரைவாக ஆரம்ப விக்கெட்டுக்களை இழந்தது. இந்த நிலையில் பின்னர் ஆடுகளம் நுழைந்தவர்களும் பொறுப்பற்ற ஆட்டமாட இறுதியில் 144 ஓட்டங்களை மாத்திரம் பெற்று இந்தியா அனைத்து வ..்கெட்டுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் வர்சத் ஹான் மூன்று விக்கெட்டுக்களையும் ரசாக் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக 72 ஓட்டங்களைக் குவித்த பாகிஸ்தானின் மலிக் தெரிவானார். போட்டித் தொடர் நாயகனாக 15 விக்கெட்டுக்களை வீழ்த்திய நவீட் உல் ஹசன் தெரிவானார். இவ் இறுதிப் போட்டியை பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி மற்றும் உயர் தலைவர்கள் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது.

# அப்ரிடிக்கு ஐந்து லட்சம் பரிசு பாக்.பிரதமர் முஷாரப் அறிவிப்பு



கான்பூரில் நடந்த 5ஆவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 5 ஆவது விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் அப்ரிடி 46 பந்துகளில் 102 ஓட்டம் குவித்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

அபார சதம் கண்ட அப்ரிடிக்கு பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்தார். அத்தோடு அவர் அப்ரிடிக்கு ரூ.5 லட்சம் பரிசாக வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்.

# எனக்கு தடைவிதித்தது சரியல்ல நீக்க வேண்டும் என்கிறார் கங்குலி




எனக்குத் தடை விதித்தது சரி அல்ல, நீக்க வேண்டும் என்று இந்திய அணித்தலைவர் கங்குலி 17 பக்கம் விளக்கக் கடிதம் எழுதியுள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே அகமதாபாத்தில் நடந்த நான்காவது ஒரு நாள் போட்டியில் மெதுவாக இந்திய அணி பந்து வீசியது. இதற்காக கங்குலி ஆறு போட்டிகளில் விளையாட நடுவர் தடை விதித்தார். இந்தத் தடையை எதிர்த்து கங்குலி சர்வதேச கிரிக்கெட் சபையிடம் (ஐ.சி.சி) முறையீடு செய்தார். விசாரணை முடியும் வரை கங்குலி போட்டிகளில் விளையாடலாம் என அனுமதி அளித்தது. ஆனால் கங்குலி ஐந்தாவது மற்றும் ஆறாவது ஒரு நாள் போட்டிகளில் ஆட இந்திய கிரிக்கெட் சபை அனுமதி வழங்கவில்லை.

இந்த நிலையில் கங்குலி தனது விளக்கத்தை 17 பக்க அளவில் அறிக்கையாக ஐ.சி.சிக்கு அனுப்பிவைத்துள்ளார். இதில் எனக்கு தடை விதித்தது சரி அல்ல. இதை நீக்க வேண்டும்" என்று குறிப்பிட்டு இருக்கிறார். மேலும் தொலைபேசி மூலமும் தனது விளக்கத்தை கங்குலி தெரிவித்துள்ளார். இதேபோல் கங்குலிக்கு தடை விதித்த நடுவர் கிறிஸ்பிராட்டும் தனது விளக்கத்தை அளித்துள்ளார்.

கங்குலியின் முறையீடு குறித்து விசாரணை நடத்த ஐ.சி.சி மைக்கேல் பிலோப் என்பவரை விசாரணை அதிகாரியாக நியமித்துள்ளது. அவர் ஒரு வாரகாலத்தில் விசாரணையை முடித்து தீர்ப்பை அறிவிப்பார்.

# மே.தீவுக்கு எதிரான 3 ஆவது போட்டி டிப்பன்னர் இடம் பெற வாய்ப்பு



தென்னாபிரிக்க அணிக்கும் மேற்கிந்திய தீவுகளின் பல்கலைக் கழக அணிக்குமிடையில் நடைபெற்ற இரண்டு நாள் கிரிக்கெட் போட்டியின் முதலாம் நாள் ஆட்ட நேர முடிவில் நேற்று முன்தினம் தென்னாபிரிக்க அணி 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 349 ஓட்டங்களை எடுத்துள்ளது. அவ்வணியின் டிப்பன்னர் 167 ஓட்டங்களை பெற்றார். ஹெர்சல் கிப்ஸ் 81 ஓட்டங்களைப் பெற்றார்.

கடந்த போட்டிகளில் காயம் காரணமாக விளையாடாது விட்ட டிப்பன்னர் இங்கு காட்டிய திறமையால் வியாழனன்று நடைபெறும் மூன்றாவது டெஸ்ட போட்டிக்கு அழைக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



அமெரிக்காவில் நடைபெற்ற உள்ளூர் உதைபந்தாட்டப் போட்டியின் போது சிவாஸ் அணியின் கோல்காப்பாளருக்கும் சக வீரருக்குமிடையே ஏற்பட்ட மோதலின் போது கோல் காப்பாளர் கீழே விழும் காட்சி.


# கங்குலிக்கு இன்று இறுதித் தீர்ப்பு

சவுரவ் கங்குலி ஆறு ஒரு நாள் போட்டிகள் விளையாடத் தடைவிதிக்கப்பட்ட விவகாரத்தில் ஐ.சி.சி விசாரணைக்குழு இன்று இறுதித் தீர்ப்பு வழங்குகிறது.

பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் தொடரின் அடுத்தடுத்த போட்டிகளில், குறிப்பிட்ட நேரத்தில் இந்திய அணி பந்து வீசி முடிக்கவில்லை. இதற்காக அணித்தலைவர் சவுரவ் கங்குலிக்கு ஆறு ஒருநாள் போட்டிகள் விளையாடத் தடை விதித்தது சர்வதேச கிரிக்கெட் சபை(ஐ.சி.சி). தடையை எதிர்த்து முறையீடு செய்துள்ளார் கங்குலி.

இந்த முறையீடு மீதான விசாரணையை ஐ.சி.சி நன்னடத்தைப் பிரிவு அதிகாரி மைக்கேல் பெலோப் விசாரிக்கிறார். விசாரணையை இரு விதங்களில் அவர் நடத்தலாம். தாமதத்திற்கான காரணம் என்ன என்று விளக்கமளித்து 17 பக்க அறிக்கை அனுப்பியுள்ளார் கங்குலி.

# பெடரர் அதிர்ச்சித் தோல்வி



மான்டி கார்லோ டென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டியில் ரோஜர் பெடரர் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். முன்னணி வீரர்கள் பங்கேற்கும் இத்தொடர் மொனாகோவில் நடக்கிறது. ஒற்றையர் காலிறுதிப் போட்டி கடந்த வெள்ளியன்று நடந்தது. இதில் உலகின் முதல் நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் பெடரர், 101 'ஆம் நிலை வீரரான பிரான்சின் ரிச்சர்ட் காஸ்கோயட்டை எதிர்த்து விளையாடினார். இரு வீரர்கள் இடையே கடும் போட்டி நிலவியது. இரண்டு மணி நேரம் 20 நிமிடங்கள் நடந்த இப்போட்டியில் பெடரர் 7-6,2-6,6-7 என்ற செட்களில் தோல்வி அடைந்தார். கடந்த 53 போட்டிகளில் இவர் பெறும் இரண்டாவது தோல்வி இது.

மற்றொரு போட்டியில் ஸ்பெயினின் ரபெல் நாடல் 6-3,6-0 என்ற நேர் செட்களில் ஆர்ஜென்டினாவின் கஸ்டன் காடியோவை வீழ்த்தினார். அரையிறுதியில் இவர் காஸ்கோயட்டை சந்திக்கிறார்.

# கலாமன்ற கழகம் சம்பியன்

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் திருநெல்வேலி கலாமன்ற விளையாட்டுக்கழகம் இவ் வாண்டுக்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட் டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இட்ம்பெற்ற போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டு கழகமும், திருநெல்வேலி கலாமன்ற விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

கலாமன்ற விளையாட்டுக் கழகம் முதல் பாதி ஆட்டத்தில் ஒரு கோலையும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் ஒரு கோலையும் பெற்றுக் கொண்ட போதிலும் பொற்பதி விளையாட்டுக்கழகம் இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஒரு கோலைப் பொற்றுக் கொண்டமையாலும் கலாமன்ற விளையாட்டுக்கழகம் 2-1 என்ற கோல் கணக்கில் பொற்பதி விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட கிராம அலுவலர் வ.சந்திர சேகரம் அணி வீரர்களுக்கு அறிமுகம் செய்து வைகககப்பட்டார்

(41)

# பயிற்சியாளராக நியமிக்கும் யோசனையை அவுஸ்.முன்னாள் வீரர் நிராகரித்தார்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக நியமிக்கும் யோசனையை அவுஸ்திரேலிய முன்னாள் துடுப்பாட்ட வீரர் ஸ்ரீவ் றிக்சன் நிராகரித்துள்ளார்.

எனினும் ரொட் மார்ஷ் நியமிக்கப்படலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போதைய பயிற்றுநரின் ஒப்பந்தகாலம் ஜூன் முதலாம் திகதி முடிவடையவுள்ளது. றிக்சன் தற்போது சரேமாநில முகாமையாளராக பதவி வகிக்கின்றார். டிசம்பர் மாதத்துடன் மார்ஷின் ஒப்பந்தகாலம் முடிவடைந்தாலும் அவர் அதனை புதுப்பிக்க விரும்பவில்லை என்றும் தான் குடும்பத்தினருடன் காலத்தை செலவிட விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். ஜெனிங்ஸ் கடந்த ஒக்டோபர் மாதம் இடைக்கால பயிற்றுநராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரையிறுதியில் ஹெனின்

பேமிலி சர்க்கிள் கோப்பை டென்னிஸ் தொடரில் ஜஸ்டின் ஹெனின் அரையிறுதிக்கு முன்னேறினார். அமெரிக்காவின் சார்லஸ் டன் நகரில் இத்தொடர் நடக்கிறது. கடந்த வெள்ளியன்று நடந்த காலிறுதிப் போட்டியில் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் டேவன்போர்ட், பெல்ஜியத்தின் ஹெனினை எதிர்த்து விளையாடினார். இப்போட்டியில் ஹெனின் 3-6,6-3, 1-0 என்ற செட்களில் முன்னிலையில் இருந்தபோது காயம் காரணமாக டேவன் போர்ட் விலகிக் கொண்டார். இதன் மூலம் ஹெனின் அரையிறுதிக்குத் தகுதிபெற்றார்.





# மேசைப்பந்தாட்டப் போட்டி

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட விளையாட்டுத் திணைக்களம் மாகாண மட்டத்தில் நடத்திய மேசைப்பந்தாட்டப் போட்டிகள் நேற்று யாழ். மத்திய கல்லூரியின் உள்ளரங்க மைதானத்தில் காலை 8.30 மணி முதல் இடம் பெற்றுள்ளது.

பிரதேச அலுவர் பிரிவு ரீதியாக இப்போட்டிகளை நடத்துவதற்கு போதியளவு கழகங்கள் இன்மையால் நேரடியாக இப்போட்டி மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் (41)

## சிந்தனைக்கு



எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும், உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 18-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# தேசவிரோதிகளின் கூட்டு!

பொலநறுவை மாவட்டம், சொறிவிலவில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் தமிழ்த் தேசவிரோதக் குழுவினர் என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றாயினும், இதில் கொல்லப் பட்டவர்கள் ஒரு தேசவிரோதக் குழுவைச் சேர்ந்தவர்கள் அல்ல இரண்டு குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்பது இங்கு முக்கியத்துவம் மிக்கதொரு தகவலாகும்.

சொறிவில சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் கருணா குழுவினர் என்றே ஆரம்பத்தில் சிறிலங்கா அரசு சாதிக்க முனைந்தது. ஆனால் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில், ஈ.என்.டி,எல்.எப் குழுவைச் சேர்ந்தவர்களும் உள்ளடங்கியுள்ளனர் என வெளியாகி யுள்ள தகவல்களிலிருந்தும், இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான அரசியற்தீர்விற்கும் எதிரான முனைப்பான செயற்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்றே கொள்ள வேண்டியுள்ளது.

கருணாவுடன் எத்தனைபேர் எஞ்சியுள்ளனர்? அவர்கள் தனித்துவமாகச் செயற்படக் கூடியவர்களாக உள்ளனரா? என்பது இன்று பரவலாக கேட்கப்படும் கேள்வியாக இருந்தாலும், கருணா குழு என்ற பெயரில் செயற்படுபவர்களில் சிறிலங்கா புலனாய்வுத் துறையினரால் பயன்படுத்தப்படும் பலரும் இணைந்தே செயற்படு கின்றனர் என்பதே யதார்த்தமாக உள்ளது. இதனை வெளிப்படுத் துவதற்கான ஆதாரங்கள் பல அண்மைக்காலத்தில் வெளிவந்து முள்ளன.

கிழக்கில் அண்மைக்காலத்தில் விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்கள் கருணாகுழுவின் பெயரில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இவற்றில் சிறிலங்கா புலனாய்வுத் துறையினர் சம்பந்தப்பட்டமை அறியப்பட்டதொன்றே. இவற்றை சிறிலங்கா இராணுவத்தரப்போ, அதன் புலனாய்வுத்துறையோ ஏற்றுக்கொள்ளாது போனாலும் இன்று கருணா குழு தம்முடன் இருப்பதை மறுப்பதற்காகப் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டிய அவலமானதொரு நிலையிலேயே அவை உள்ளன.

அதிலும் குறிப்பாகத் தீவுச் சேனையிலும்,சொறிவிலவிலும் நிகழ்ந்த சம்பவங்களின் பின்னர், அரசின் நிலை நெருக்கடியா கியுள்ளது. ஏனெனில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிகழ்ந்துள்ள இச் சம்பவங்களினால், இப்பிரதேசங்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளன என்பதையே உறுதிபடக் கூறமுடியாத அவலம் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, சொறிவில சம்பவத்தில் ஈ.என்.டி.எல்.எப் குழுவைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டமையானது, சிறிலங்கா இராணுவமும்,புலனாய்வுத்துறையும், கருணாகுழுவினரை மட்டுமல்ல, வேறு சில குழுக்களையும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் பயன்படுத்துவதில் தீவிர முனைப்புடன் இருப் பதை வெளிக்காட்டுவதாய் உள்ளது. அத்தோடு ஈ.என்.டி.எல்.எப் போன்ற குழுக்களின் வருகையானது, சமாதான முயற்சிகளுக்கு எதிராக இலங்கைக்கு வெளியில் உள்ள சில சக்திகளும் சிறிலங்கா இராணுவத்துடனும், புலனாய்வுத்துறையுனும் இணைந்து செயற்படுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

ஏனெனில், ஈ.என்.டி.எல்.எப் குழு என்பது நீண்ட காலமாக இலங்கை அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்தது. அதாவது இந்தியாவை மையமாகக் கொண்டு இயங்கிவந்த இக்குழு பெரும்பாலும் செயற்படாத நிலையில் இருந்ததென்றே கூறலாம். ஆனால், தற் பொழுது ஈ.என்.டி.எல்.எப் முக்கியஸ்தர் உட்பட சிலர் சொறிவிலவில் கொல்லப்பட்டமையானது இக் குழுவும் சிறிலங்கா இராணுவத்துடன் மீண்டும் இணைந்து செயற்படத் தொடங்கியுள்ளது என்பதை உறுதி செய்வதாகவே உள்ளது.

கருணா வெளியேற்றப்பட்ட காலப்பகுதியில் இருந்தே ஈ.என்.டி.எல்.எப் பின் மீள் வருகை குறித்த தகவல்களும், அவர்கள் சிறிலங்கா இராணுவத்தின் துணைப்படையாகச் செயற்படத் தொடங்கியிருப்பதாகவும் தகவல்கள் வெளிவரத் தொடங்கியிருந்தன. அத்தோடு, ஈ.என்.டி.எல்.எப் முக்கியஸ்தர் ஒருவர் இனந்தெரியா தோரால் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டும் இருந்தனர்.

ஆனால் ஈ.என்.டி.எல்.எப் மீண்டும் இலங்கையில் செயற்பட முனைவதானது, தனியாக அக்குழுவின் தீர்மானமாக இருக்க முடியாது. அக்குழுவினரை நீண்டகாலமாக போசித்து வருபவர் களின் தீர்மானங்களுடனும் சம்பந்தப்பட்டதாகவே இருக்க முடியும் என எண்ண வைக்கின்றது. ஏனெனில், அவர்கள் தனித்துவமாகத் தீர்மானம் எடுக்கும் சக்திகள் கொண்டவர்களாக என்றும் இருந்ததில்லை.

ஆகையினால் ஈ.என்.டி.எல்.எப்.பின் வருகையும், அவர்கள் கருணா குழுவினருடன் தங்கியிருந்துள்ளமையும், விடுதலைப் புலிக ளுக்கும் சமாதான நடவடிக்கைக்கும் எதிராகச் செயற்படுவதில் ஒன்றிற்கு மேற்பட்ட சக்திகள் இணைக்கப்பட்டுள்ளதென்பதையே வெளிப்படுத்தவதாய் உள்ளது. அதாவது சிதறிப் போயுள்ள தேசவிரோத சக்திகளை ஒன்றிணைக்கவும் இயங்கவைக்கவும் மேற் கொள்ளப்படும் முயற்சியே ஆகும்.

ஆகையினால், இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு, சமாதான முயற்சிகள் என்பனவற்றிற்கு மாறான வகையில் சிறிலங்கா அரசாங்கம் மட்டுமல்ல வேறு சில சக்திகளும் ஈடுபாடு காட்டி வரு கின்றதையே அண்மைய நிகழ்வுகள் வெளிப்படுத்துபவையா கவுள்ளன. அதாவது சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஒன்றிற்கு மேற்பட்ட சக்திகள் முனைப்புடன் செயற்படுவதில் அக்கறை கொண்டுள்ளன என்பதன் வெளிப்பாடே இதுவாகும்.

# ஆண்டு பதினேழு...



பூபதித் தாயவளை
புனிதத்தாயாக
பூசிக்கத் தொடங்கியின்று
ஆண்டு பதினேழு

காந்திய தேசத்தின்
முகமூடி கிழித்தெறிந்து
மூலையில் முடக்கப்பட்டின்று
ஆண்டு பதினேழு

தமிழ் தாய் குலத்தின்
தீரமதை பாருணர்ந்து
வியப்புறத் தொடங்கியின்று
ஆண்டு பதினேழு

அரக்கர் படைவந்து
உயிர் குடித்து சென்றதனால்
ஈழமே சோகம் மயமாகியின்று
ஆண்டு பதினேழு

வல்லப்படைவரினும்
வெல்ல முடியுமென்று
சொல்லியடித்தின்று
ஆண்டு பதினேழு

பாவகையில் கவிஞரெல்லாம்
பெண் குலத்தின் வீரமதை
பாடத்தொடங்கியின்று
ஆண்டுபதினேழு.

ஆண்டுகள் பதினேழு
ஆனாலும் உம் நினைவு
தொடர்ந்துவரும் இங்கு
நூற்றாண்டு பதினேழாய்

இ.சசிக்குமார்.

# மின்சாரசபையை மீளமைப்பது தொடர்பாக நிதி அமைச்சின் செயலர் விளக்கமளிக்க முடியாது

## - எரிபொருள் மின்சாரத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

(கொழும்பு)

மின்சார சபையை மீளமைப்பது தொடர்பாக நிதி அமைச்சின் செயலர் பாராளுமன்றத்தில் விளக்கமளிக்க முடியாது என எரிபொருள் மின் சாரத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். மின்சார சபையை மீள் அமைப்பது தொடர்பில் தனியார்மயம் என்ற பதம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் தனியார்மயம் என்பதற்கு இங்கு இடமில்லை என நிதியமைச்சின் செயலர் பி.பி. ஜெயசுந்தர தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தாம் பாராளுமன்றத்தில் விளக்கமளிக்கப்போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை பி.பி. ஜெயசுந்தரவின் கருத்தை எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த நிராகரித் துள்ளார்.

மின்சாரத்துறைக்கான அமைச்சர் என்ற வகையில் தாமே மின்சார சபையின் மீள் அமைப்பு தொடர்பில் பாராளுமன்றத்தில் விளக்கமளிக்க முடியும். அதனை நிதியமைச்சின் செயலாளரால் மேற்கொள்ள முடியாது. இந்தநிலையில் குறிப் பிட்ட மீள்அமைப்பு விடய மானது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப் பட்டமையால் அது தொடர்பில் பாராளுமன்றத்தில் விளக்கமளிக்கும் எந்த ஒரு யோசனையும் இதுவரை முன்வைக்கப்படவில்லை.

எனவே நிதியமைச்சின் செயலரது கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. அத்துடன் அவருக்கு அவ்வாறான கருத்தை தெரிவிக்கும் உரிமையும் இல்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# புலிகள் - கருணா குழுமோதல்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் எமக்கில்லை

## - போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுத்தலைவர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் இயக் கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா அணியினருக்கும், விடுத லைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதல்களை தம்மால் கட்டுப்படுத்தமுடியாது என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ர.ஃ.ப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

இந்த மோதல்களைக் தடுத்து நிறுத்தக் கூடிய ஏற்பாடுகளோ, அல்லது அதற்கான அதிகாரங்களோ போர்நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் தமக்குக் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த இரு தரப்பினருக்கும் இடையிலான மோதல்கள் அதிகரித்துச் செல்வ தாகத் தெரிவித்துள்ள அவர், எவ்வாறு இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றன, எங்கு இடம்பெற்றன என்பது தொடர் பான விபரங்களை மட்டுமே தம்மால் தெரிவிக்கமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறைந்தபட்சம் காவல்துறையினருக்கு இருக்கும் அதிகாரங்கள்கூட இந்த விடயத்தில் தமக்குக் கிடையாது என்றும், அவர் கள் மேற்கொள்ளும் நடவடிக்கை களைக்கூடத் தம்மால் மேற்கொள்ள முடியாது என்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ர.ஃ.ப் ஹொக்லண்ட் தெரிவித் துள்ளார்.

# அனல் மின் திட்டத்திற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கத் தீர்மானம்

நுரைச்சோலை அனல் மின்சாரத் திட்டத்திற்கு எதிராக நடவடிக் கைகளை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் புத்தளம் மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை முன் னெடுப்பதெனவும் நேற்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட் டுள்ளது. எதிர்வரும் மேதின நிகழ்வின் போது மலையக கட்சிகள் மேல்கொத்மலை திட்டத்தை முன்னி லைப்படுத்தவுள்ளன.

புதிய ஜனநாயக கட்சி இதற்கான தீவிர முனைப்பில் ஈடுபட்டுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி என்பன இந்த திட்டத்தை வரவேற்பது வரலாற்றுத் தவறு என அந்தக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. எனவே எதிர்வரும் மேதினத்தில் மலையக மக்கள் தமது இருப்பை பாதுகாக்கும் முயற்சியின் வெளிப்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

# கிழக்குச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகின்றதாம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் விரைவான விசாரணைகள் நடைபெறுவதாக பொலிஸ்மாஅதிபர் சந்திரா பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். இதற்காக தாம் குற்றப்புலனாய்வு துறையினரை அங்கு அனுப்பியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் விசாரணைகள் நடைபெறுகின்றன.

அதேநேரம் அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் பிரதேசங்களில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் முடியும் வரை எவர் மீதும் குற்றம் சுமத்த முடியாதென அவர் தெரிவித்துள்ளார். (32)

# முன்னாள் நீதிபதிகள் இருவருக்கு எதிராக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவில் விசாரணைகள்

(கொழும்பு)

முன்னாள் நீதிபதிகள் இருவருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக நீதிச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மூதூர் மற்றும் வெல்லவாய முன்னாள் நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிராகவே விசாரணைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் சந்திரா ஜெயதிலக தகவல் வெளியிட்டுள்ளார். மூதூர் நீதிமன்ற நீதிபதி ஏ.எல்.ஏ.கபூர் மற்றும் வெல்லவாய நீதிமன்ற நீதிபதி ஜனக பிரியந்த பண்டார ஆகியோர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் முறையிடப்பட்டிருப்பதாகவும், இவர்களுக்கு எதிரான விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் சந்திரா ஜெயதிலக மேலும் தெரிவித்துள்ளார். மூதூர் நீதிமன்ற நீதிபதி ஏ.எல்.ஏ.கபூர், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு வழங்கிவந்தவரெனவும், இதன் காரணமாக அவர் நீதியான முறையில் செயற்படவில்லையெனவும் அந்தப் பிரதேச சிறிலங்காப் பொலிஸ் அதிகாரியொருவர் முறைப்பாடு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வெல்லவாய நீதிமன்ற நீதிபதி ஜனக பிரியந்த பண்டார, வீதி விபத்தொன்றில் தொடர்புபட்டிருந்த பொலிஸ் அதிகாரிக்கு பிணை வழங்கியமை தொடர்பில் நீதியாகச் செயற்படவில்லையென குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதாக நீதிச் சேவைகள் ஆணைக்குழு தகவல் வெளியிட்டுள்ளது.

## மதமாற்ற தடைச் சட்டம்

# ஆட்சேபித்து பேரணி நடத்த கிறிஸ்தவ அமைப்புக்கள் ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையின் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள மதமாற்ற தடைச்சட்டப் பிரேரணையை ஆட்சேபித்து பேரணிகளை நடத்த சர்வதேச கிறிஸ்தவ அமைப்புகள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக அண்மையில் இந்த அமைப்புகள் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் நிறுவன அதிகாரிகளைச் சந்தித்துள்ளன.

இதனையடுத்து அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் பேனாட் குணதிலக்கவை அந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் சந்தித்துள்ளனர்.

இதன்போது சர்வதேச நாடுகள் இலங்கை அரசாங்கம் சிறுபான்மையினரின் மதங்களுக்கு வழங்கும் உரிமைகள் தொடர்பில் உன்னிப்பாக அவதானம் மேற்கொண்டிருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் இதன்போது கருத்துரைத்துள்ள அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் பேனாட் குணதிலக்க தாம் இந்த விடயத்தை இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக தெரிவித்துள்ளார்.

# கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

பன்றி வேட்டைக்கென வயலில் கட்டப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேற்படி சம்பவம் நேற்று காலை 7.30 மணியளவில் கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காலையில் தனது வயலை பார்வையிடச் சென்ற மேற்படி குடும்பஸ்தர் வயலில் பன்றி வேட்டைக்கென வேட்டையாடுபவர்களால் மறைவாக கட்டப்பட்டிருந்த கட்டுத்துவக்கில் அகப்பட்டதன் விளைவாக கட்டுத் துவக்கு வெடித்ததில் இடது காலில் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

ஜெயந்திநகரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சி. மகேந்திரன்(வயது-38) என்பவரே மேற்படி சம்பவத்தில் படுகாயத்திற்குள்ளானாரென்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

# பிரதேச செயலரின் கொலைவிசாரணை குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம்

(கொழும்பு)

திருக்கோவில் பிரதேச செயலர் ஏ.கே தவராசாவின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட திருக்கோவில் பிரதேச செயலரின் கொலை தொடர்பான விசாரணைகளை முதலில் திருக்கோவில் பொலிசாரே மேற்கொண்டு வந்தனர். இந்தக் கொலை தொடர்பான விசாரணைகள் நேற்று முன்தினம் முதல் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் கொண்டு வரப்பட்டதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ கூறினார்.

## நோர்வேயின்...

காரிகளையும் முஸ்லிம் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார். முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு சமாதானப் பேச்சு வார்த்தைகளில் உரிய இடம் பெற்றுக் கொடுக்கப்படும் என அவர் அங்கு தெரிவித்தார்.

## வித்துடல்...

பிராய் அண்ணாசனசமூக நிலையத்தில் இறுதி வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் எடுத்துவரப்பட்டு வித்துடல் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது. (சு)

## ஜே.வி.பி...

விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்ததாகவும், ஆனால் தற்பொழுது அதனை மீறிச் செயற்படுவதற்கு அரசாங்கம் முற்படுவதாகவும் தனியார்மயமாக்கலை எதிர்த்து வந்த ஜே.வி.பியினர் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், பதவிகளைக் காப்பாற்றுவதற்காகவும் தற்பொழுது அமைதியாக இருந்து வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## சிறிலங்கா...

வருவதாக கடந்த மார்ச் மாத இறுதியில் மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.இம்மூன்று அமைச்சுக்களும் மக்கள் விடுதலை முன்னணியின் அமைச்சர்கள் வசம் இருப்பது குறிப்பிடத்தக்கது. 2003 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் சேவை மற்றும் தொழிற்துறை சிறப்பாகச் செயற்பட்டது போல காணப்பட்டாலும் விவசாயத்துறையின் சில பிரிவுகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக 2004 இன் மூன்றாவது காலாண்டுப்பகுதியில் பொருளாதார பின்னடைவுகள் ஏற்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இது தவிர பொலன்னறுவை மற்றும் குருணாகல மாவட்டங்களில் நெல் உற்பத்தியும் கணிசமான அளவு குறைவடைந்துள்ளன.

## ஆளும்...

முயற்சிகளை மேற் கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சனாதிபதிக்கு எதிரான அணியில் சனாதிபதியின் சகோதரரும், அமைச்சருமான அநுரா பண்டார நாயக்காவை இணைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றுள்ளன.

அடுத்த சனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சனாதிபதியுடனும், பிரதமருடனும் முரண்பட்டுள்ள அநுரா பண்டாரநாயக்கா ஜே.வி.பி யின் தீவிர ஆதரவாளர் என்பதால் அவரைக் கொண்டு தமது நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்க ஜே.வி.பி தரப்பு முயற்சிப்பதாக சுட்டிக் காட்டப்படுகின்றது. சனாதிபதிக்கு எதிரான நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கினால் கூட்டமைப்பின் சனாதிபதி வேட்பாளராக அநுராவை நியமிப்பதற்கும் ஜே.வி.பி தரப்பு இணங்கியுள்ளதாக தெரியவருகின்றது. மிக விரைவில் இலங்கை அரசியலில் முக்கிய திருப்பங்கள் ஏற்படலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (32)

## தியாகி...

உண்ணா விரத நோன்பு நிகழ்வு நாளை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலர் நேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் இன்று காலை நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ள நிகழ்வில் நெடுங்கேணிப் பிரதேச மக்களும், மாணவர்களும், போராளிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். காலையில் அடையாள உண்ணாவிரதம் ஆரம்பமாகி மதியம் நினைவுரைகளும், சிறப்புக் கலைநிகழ்வுகளும் இடம் பெறும்.

இந்நிகழ்வின் இறுதியில் நெடுங்கேணிப் பிரதேசத்தில் கல்வி கற்கும் திறமையான வறிய மாணவர்களுக்கு அன்னை பூபதி நினைவாக சூரிய மின்கலத் தொகுதிகளும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. (சோ)

## முஸ்லிம்...

மாணத்துறை அமைச்சருமான பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் நிவாரண உதவிகளைப் பகிர்ந்தளிப்பதற்கு அமைக்கப்படவிருக்கும் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் அபிலாசைகளும் உள்ளடக்கப்பட வேண்டுமெனவும்,

இந்த விடயம் தொடர்பாக கவனமெடுப்பதாக சனாதிபதி உறுதியளித்திருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். பொதுக்கட்டமைப்பு தொடர்பில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்துடன், முஸ்லிம் சமாதானச் செயலகம் தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணிவருவதாக அமைச்சர் பேரியல் அஷ்ரப், தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் கோரிக்கைகளும் உள்ளடக்கிய வகையிலேயே பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

## தேசத்துரோக...

என்ன?

பதில்: 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்திலிருந்து அமைதி முயற்சிகள் குறித்து உரிய விளக்கங்களை மக்களுக்குத் தெரிவித்து வருகிறோம். அமைதி முயற்சிகள் தடைப்பட்டிருக்கும் இக்காலத்திலும் கூட மக்களுக்கு நம்பிக்கையூட்டி வருகிறோம். பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் மக்களை பங்கேற்கச் செய்துள்ளோம்.

கேள்வி: கருணா குழு அச்சுறுத்தல் குறித்து?

பதில்: மட்டக்களப்பு-அம்பாறை பகுதியில் அவர்களுக்குச் செல்வாக்கு இல்லை. சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் உதவியோடு அவர்கள் இயங்குவதாக அறிகிறோம். முன்னர் ராசிக் குழு மற்றும் புளொட் மோகன் குழு இயங்கியதைப் போன்றுதான் இவர்களும்.

கேள்வி: மட்டக்களப்பு-அம்பாறை தமிழ் மக்கள் மத்தியில் கௌசல்யன் படுகொலை கடுமையான அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. ஐக்கிய நாடுகளின் செயலர் நாயகம் கொபி அனானும் கண்டனம் தெரிவித்திருந்தார். மக்கள் மத்தியில் இது எப்படியான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது?

பதில்: கௌசல்யன் படுகொலை எமக்கும் தமிழ் மக்களுக்கும் மட்டுமின்றி சர்வதேச சமூகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்த அதிர்வலைகளின் வெளிப்பாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளை சர்வதேச சமூகம் அங்கீகரித்தது. பேரினவாதிகள் இந்த அங்கீகாரத்தை நிராகரித்தார்கள். போரினால் சிதவடைந்த மட்டக்களப்பு-அம்பாறை பிரதேசத்தை மீளக் கட்டமைக்கும் பணியில் கௌசல்யன் இப்பிரதேசத்தில் கடுமையாக உழைத்தார். அவரது இழப்பு மட்டக்களப்பு-அம்பாறையில் அனைவருக்குமே பேரிழப்புதான்.

கேள்வி: அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகள் ஆயுதங்களோடு வருகிறார்கள் என்ற இராணுவ குற்றச்சாட்டு குறித்து?

பதில்: யுத்தம் நடைபெறாத சூழலில் அப்பகுதிக்குள் செல்லும் போது ஆயுதங்களை நாம் எடுத்துச் செல்வதில்லை. சோதனைச் சாவடிகளில் இருக்கும் இராணுவத்தினரின் திட்டமிட்ட சதிகளால் இப்பரப்புரைகள் உருவாக்கப்படுகின்றன.

கேள்வி: சிறிலங்கா அதிரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கிழக்குப் பிரதேசத்தில் முறுகல் நிலை ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகினவே...

பதில்: நாங்கள் அரச படையினருடன் நட்புணர்வோடு கைகுலுக்கிக் கொள்ளவே விரும்பினாலும் அது நிராகரிக்கப்பட்டே வந்திருக்கிறது. ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்த எமது பெண் போராளி ஒருவரை சிறிலங்கா அதிரடிப்படையினர் தாக்கினர். அம்பாறை அரசியல் துறை பொறுப்பாளர் குயிலின்பன் மற்றும் பத்துப் பேர் அண்மையில் அரச படையினரின் தாக்குதலுக்குள்ளாயினர். பொதுமக்களையும் எதுவித காரணமுமின்றி அச்சுறுத்தி துன்புறுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இது எதிர்பாராத ஒரு சூழ்நிலை.

கேள்வி: கௌசல்யன் படுகொலை தொடர்பாக சனாதிபதி ஆணைக்குழு முன்பு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஏன் சாட்சியமளிக்கவில்லை?

பதில்: மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலை தொடர்பாகவும் சனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அது என்ன ஆனது என்று தெரியவில்லை. கௌசல்யன் படுகொலையில் குற்றம் சாட்டப்பட்டிருப்பது அரச படைகள்தான். அவர்கள் சனாதிபதியின் கீழ் கடமையாற்றுபவர்கள். ஆணைக் குழுவினரும் சனாதிபதியின் கீழ் கடமையாற்றுபவர்களே. அப்படியிருக்கும் போது நீதியை எப்படி எதிர்பார்க்க முடியும்?

## கனடா...

பிக்கப்படாது விட்டாலும் கூட, கனடா குடிவரவு குடியகல்வுச் சட்டம் 2002 இன் பிரகாரம் கனடாவிற்குள் நுழைவதற்குத் தகுதியற்றவர் என கனடா அரசாங்கம் சிறிலங்கா அரசிற்கு அறிவித்துள்ளது.

இலங்கையில் நிகழ்த்தப்பட்டு வரும் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு விடுதலைப்புலிகளே காரணம் என வெளி உலகத்திற்கு காட்ட முயன்று வரும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு நல்ல பாடம் ஒன்றை கனடா அரசாங்கம் புகட்டியுள்ளது. சந்திரானந்தா டி சில்வா பாதுகாப்புச் செயலாளராகப் பதவியேற்கும் முன்னர் தேர்தல் ஆணையாளராகப் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கனடா அரசியல் மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் ரொறொன்ரோ வாழ் தமிழர்கள் அழுத்தமே கனடா அரசின் இம் முடிவிற்குக் காரணமென இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


## உப மருந்தாளர் பயிற்சிநெறி ஆரம்பம்

**அண்மைக்காலங்களாக நடைபெற்று வந்த உப மருந்தாளர் பயிற்சி நெறி மழை காரணமாகவும் சுனாமி அனர்த்தம் காரணமாகவும் பிற்போடப்பட்டிருந்தது. இவ்வகுப்புக்கள் மீண்டும் 23.04.2005 ஆரம்பமாக உள்ளதால் இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்பவர்கள் மீண்டும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.**

நிர்வாகம்
நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்
கிளிநொச்சி

(சி.11645)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது